பக்கங்கள் : பதின்நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 14 புதன்கிழமை (30.07.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 245

# அரசமைப்புக் கவுன்ஸில் நிறுவாததை ஆட்சேபித்து ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு

## உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது

கொழும்பு, ஜூலை 30

அரசமைப்பு கவுன்ஸில் நிறுவப்படாமையை ஆட்சேபித்து, ஜனாதிபதி மற்றும் சபா நாயகருக்கு எதிராக நேற்றுத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் இரண்டை, உடனடியாகவே பரீசிலனைக்கு எடுத்துக் கொண்ட உயர்நீதிமன்றம் நேற்று அந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது.

பேராசிரியர் சுமனசிறி லியனகே, ரவி ஜெயவர்த்தனா ஆகியோர் சார்பிலேயே இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. மனுக்களில் எதிர்மனுதாரர்களாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த மனு நேற்றே நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் நிமால் காமினிஅமரதுங்க, பி.ஏ.ரட்ணாயக்கா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளி மாலை 5மணி முதல் சூரிய கிரகணம் தென்படும்

கொழும்பு, ஜூலை 30

இலங்கையின் வான்பரப்பில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5மணி முதல் 6.33மணிவரை சூரிய கிரகணம் தென்படும் என்று ஆர்தர் சி கிளார்க் ஆராச்சி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே

கல்விச்சுடர்

7 ஆம் பக்கத்தில்:

* தரம் - 5 மாணவருக்கான மாதிரி வினாப்பத்திரம்

8 ஆம் பக்கத்தில்:

க.பொ.த (உயர்தர)மாதிரி வினாத்தாள்

* தமிழ் * அரசியல்

## இந்தியா – பாகிஸ்தான் தலைவர்கள் 'சார்க்' வேளையில் சந்திக்கத் திட்டம்?

கொழும்பு, ஜூலை 30

கொழும்பில் 15 ஆவது 'சார்க்' உச்சி மாநாடு நடைபெறும்வேளை இந்திய - பாகிஸ்தான் தலைவர்களிடையே உத்தியோகபூர்வ உயர்மட்டசந்திப்பொன்று நடைபெறவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ராஜா கிலானிக்கும் இடையிலான சந்திப்பொன்றிற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தான், பெங்களூர், குஜராத் குண்டுவெடிப்புகளால் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையிலேயே இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது.

கடந்த 15 மாத காலப் பகுதியில் இரு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு இராணுவ உதவிகளை நிறுத்துவதற்கு இஸ்ரேல் தீர்மானம்!

### ஈரானுடன் நெருங்கி உறவாடுவதால்

கொழும்பு, ஜூலை 30

ஈரான் அரசுடன் இலங்கை அரசு மேற்கொண்டுவரும் நெருக்கமான உறவுகளை அடுத்து இலங்கைக்கான படைத்துறை உதவிகளை இஸ்ரேல் நிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பு ஆங்கில நாளேடு ஒன்று நேற்று இந்தத் தகவலை வெளியிட்டது.

அந்தச் செய்தியின் விவரம் வருமாறு:- இஸ்ரேலின் படைத்துறை உற்பத்தி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் தொண்டா, முத்துசிவலிங்கம் உட்பட மூன்று இ.தொ.கவினருக்கு எதிராக சிறைத் தீர்ப்பு!

### தலா 6 மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 3 மாதச் சிறையும் ரூபா 1,000 அபராதமும்

நுவரேலியா, ஜூலை 30

அமைச்சர்கள் தொண்டமான், முத்துசிவலிங்கம் உட்பட மூன்று இ.தொ.காவின் உயர்மட்டத் தலைவர்களுக்கு நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டுகளுக்காக தலா ஆறு மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட மூன்று மாதச் சிறைத்தண்டனையும் ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து நுவரெலியா நீதிவான் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்திருக்கின்றது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு முகத்துவாரத்தில் ஆடி அமாவாசையன்று நீராடலாம்

கொழும்பு, ஜூலை 30

ஆடி அமாவாசை விரதத்தை முன்னிட்டு இந்து சமய பக்தர்கள் கொழும்பு முகத்துவாரம் - களனி ஆறு சங்கமிக்கும் சமுத்திரப் பகுதியில் அன்று (ஒகஸ்ட் 1 ஆம் திகதி) காலை 5 மணி முதல் நண்பகல் வரை புனித நீராடி பிதிர்க்கடன் தீர்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மடுத் தேவாலயப் பகுதியை நேற்று பார்வையிட்டார் மன்னார் ஆயர்

### எனினும் ஆவணித் திருவிழா நடைபெறும் சாத்தியம் இல்லை

கொழும்பு, ஜூலை 30

மடுத் தேவாலயத்தில் ஏற்பட்டிருந்த சேதங்களை புனரமைப்புச் செய்துள்ள இராணுவத்தினர், தேவாலயத்தைப் பார்வையிடுவதற்காக மன்னார் ஆயர் வண. இராயப்பு ஜோஸப் மற்றும் மன்னார் மறை மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை விக்டர் சோசை ஆகிய இருவரையும் நேற்று அங்கு அழைத்துச் சென்றிருந்தனர்.

அத்துடன், மடுத்தேவாலயத்தை உரிய முறைப்படி பொறுப்பேற்குமாறு இராணுவம்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை மறுதினம் வெள்ளியன்று அரச விடுமுறை தினமல்ல

### பொது நிர்வாக அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அரச விடுமுறையாகப் பிரகடனம் செய்யப்படவில்லை என்று பொது நிர்வாக அமைச்சு நேற்று அறிவித்தது.

'சார்க்' மாநாட்டை ஒட்டி வெள்ளிக்கிழமை தொடக்கம் மூன்று நாள்கள் அரசவிடுமுறை யாக அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் 17 தமிழர் கைது

கொழும்பு,ஜூலை 30

கொழும்பு, வெள்ளவத்தைப் பகுதியில் நேற்றுக் காலை பொலிஸார் மேற்கொண்ட திடீர்சுற்றி வளைப்பு நடவடிக்கை ஒன்றின்போது 3 பெண்கள் உட்பட வடக்கு - கிழக்குத் தமிழர்கள் 17 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கொழும்பில் இடம்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## உங்கள் உதிரம் பிறர் உயிர் காக்கும்

(11 ஆம் பக்கமும் பார்க்கவும்)

## 90 நாள்களுக்குமேல் தடுப்புக்காவலில் தடுத்துவைத்திருப்பது சட்டவிரோதம்

### உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

கொழும்பு, ஜூலை 30

பொலிஸாரால் கைதுசெய்யப்படும் ஒருவர் 90 நாள்களுக்கு மேல் தடுப்புக்காவல் உத்தரவில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்படுவது சட்டவிரோதமானது என்று தீர்ப்பளித்துள்ள உயர்நீதிமன்றம், தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரை உடனடியாக சிறைச்சாலைக்கு மாற்றுமாறு உத்தரவிட்டுள்ளது.

வெள்ளவத்தை டபிள்யூ.ஏ.டி.சில்வா மாவத்தையை வசிப்பிடமாகக் கொண்ட தியாகராஜா மோகனரூபன் (வயது -33) என்பவரின்

(14 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் ஜெயரஞ்சிதன் (J.P)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தை, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற கணக்காளர் நாகலிங்கம் ஜெயரஞ்சிதன் (சமாதான நீதிவான்) நேற்று (29.07.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செல்வலட்சுமியின் அன்புக் கணவரும் மனோரஞ்சிதன், வதனா, தவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சண்முகநாதன், அருமைநாதன் மற்றும் பாக்கியம், பரமநாதன், பஞ்சலிங்கம், மகாலிங்கம், நாகலிங்கம் , நவரத்தினம், லோகசுந்தரி, பத்மநாதன், காலஞ்சென்ற தங்கராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற சேனாதிராசாவின் சகலனும் இரத்தினேஸ்வரி, சுசிலா, தவமலர், இந்திராணி, வள்ளிநாயகி ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2008) புதன்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10 மணியளவில் வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சங்கரத்தை,*
*வட்டுக்கோட்டை.* (76778)

தகவல்:
**குடும்பத்தினர்**

## நடேசு நவரட்ணம்
### (வாகனத் தரகர்)



தல்லையப்புலம், கட்டைவேலி, கரவெட்டியைச் சேர்ந்த நடேசு நவரட்ணம் நேற்று (29.07.2008) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நடேசு - சின்னமணியின் அன்பு மகனும் வனிதாமணி, அமரர் வன்னியசிங்கம், குணரத்தினம் ஆகியோரின் சகோதரனும் சிறீரவியின் அன்புக் கணவரும் வாணிதாஷ் (கனடா), அஜந்தா (கனடா), பிரபா ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தவிஜி, இராஜசேகர் ஆகியோரின் மாமனும் சகானா, ஆசியா, கிரிசாந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2008) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக வேரக்களி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தல்லையப்புலம்,*
*கட்டைவேலி, கரவெட்டி.* (A)

தகவல்:
**மனைவி, மகள்.**

## செல்லையா நடராசா



கரம்பொன், ஒழுவிலைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்புத்துறை, புங்கன்குளம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நடராசா நேற்று (29.07.2008) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா – தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், ஜெயஇந்திராதேவி, சுபாஷினிதேவி, சறோஜினிதேவி, குமுதினிதேவி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சுந்தரலிங்கம், சிவயோகசுந்தரம், சிவநாதன், விஜயரட்ணம், பத்மநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் துளஷயா, அனுஷா, பானுஜா, லதுர்ஷா, சிந்துஜா, குமணன் (பரியோவான் கல்லூரி), துஷ்யந்த் (பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.07.2008) புதன்கிழமை புங்கன்குளம் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல.60, புங்கன்குளம் வீதி,*
*கொழும்புத்துறை.* (76782)

தகவல்:
**குடும்பத்தினர்**

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பழைய மாணவியும்,
இப்பாடசாலை மாணவர்களின் கல்வி
ஊக்குவிப்பிற்காகப் புலமைப்பரிசில் நிதியம் ஒன்றை
அமரரின் ஆலோசனைப்படி நடைமுறைப்படுத்தி
வருபவருமாகிய திருமதி இராசநாயகி
அவர்களின் அன்புக் கணவர்

## பூலோகசிங்கம் வெற்றிவேலு

*(ஓய்வுபெற்ற அதிபர், யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி)*

அவர்களின் மறைவு எம்மை துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்,
யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம். (76783)

# துயர் பகிர்கின்றோம்



26.07.2008 அன்று இறைபதம் அடைந்த,
எமது சக ஆசிரிய மாணவன்
திரு.ப. ஜெயக்குமார்
அவர்களின் அன்புத் தந்தை

## தி.பஞ்சாட்சரம்

அவர்களது மறைவால் துயருற்றிருக்கும்

அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

முதலாம் வருட ஆசிரிய மாணவர்கள், ஆங்கில நெறி,
பலாலி ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலி. (76773)

# வலிகாமம் வலயத்தில் இன்று தரம்-5 முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூலை30

மக்கள் வங்கியின் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்படும் தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறவுள்ள அதே பரீட்சை நிலையங்களில் இந்த முன்னோடிப் பரீட்சை இடம்பெறவுள்ளது.

மாணவர்கள் தத்தமது பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஏற்பாடுகளைப் பாடசாலை அதிபர்கள் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை வியாழக்கிழமை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறவுள்ளன. சங்கானைக் கோட்டத்தில் வட்டு.இந்துக் கல்லூரியிலும், சண்டிலிப்பாய் கோட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், உடுவில் கோட்டத்தில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும், தெல்லிப்பழைக் கோட்டத்தில் மல்லாகம் மகா வித்தியாலயம் மற்றும் வசாவிளான் மகாவித்தியாலயத்திலும் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறவுள்ளன.

இந்த மதிப்பீட்டுப் பணிகளில் அந்தந்தக் கோட்டப் பாடசாலைகளில் தரம் ஐந்தில் கற்பிக்கும் ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (50)

# துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் படுகாயம்

மந்திகை, ஜூலை30

பருத்தித்துறையில் முதலாம் குறுக்குத் தெருவும் இரண்டாம் குறுக்குத் தெருவும் இணையும் வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முற்பகல் 10.20 மணியளவில் குறிப்பிட்ட இளைஞர் கடை ஒன்றின் முன்னால் நின்றுகொண்டிருந்தபோது இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டிலேயே இவர் படுகாயமடைந்தார்.

லூர்த்து மாதா கோயிலடி, தும்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த ரி.பாலகிருஷ்ணன் (வயது 19) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

திருமணமாகி இருவாரங்களே ஆன இந்த இளைஞர் கடந்த சில தினங்களாக இராணுவ முகாமிற்கு சென்று கையெழுத்திட்டு வந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (1-78-218-25)

# யாழ்ப்பாணக் கல்லூரியில் இன்று கல்வியாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் 25வருடங்கள் சேவையாற்றியவர்கள் இன்று கௌரவிக்கப்படவுள்ளனர்.

தென்னிந்திய திருச்சபை பேராலயத்தில் இந்த கௌரவிப்பு விழா பேராயர் கலாநிதி டானியல் தியாகராசா தலைமையில் இடம்பெறும்.

இவ்வைத்தில்கல்லூரிவளர்ச்சிக்காவும் அபிவிருத்திக்காகவும் முன்னின்று உழைத்த 5 கல்வியாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அருளுரையாற்றுவார்கள்.

வட்டு - யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோபல்.ஏ.விமலேந்திரன்,சிரேஷ்ட ஆசிரியர் அன்னப்பா ஜெயராஜன் ஆகியோர் உரையாற்றுவர். (1-95)

# ஆங்கில ஆசிரியர்களுக்கு இன்று கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூலை 30

தென்மராட்சி கல்வி வலயத்தினால் நடத்தப்படும் 'நிக்கொட்' ஆங்கில பயிற்சி நெறியில் பங்குபற்றும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு இன்று பி.ப. 2 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படு மென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

# பெயர் மாற்றம்

சாவற்கட்டு, ஆனைக்கோட்டை என்னும் விலாசத்தையுடைய பிறேசிலா ஆகிய நான் 27.07.2008 முதல் சுசீலா என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

சுசீலா,
சாவற்கட்டு, ஆனைக்கோட்டை.

# யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்
## சிறுவர் பூங்கா திறப்பு விழா அழைப்பு

*காலம்: நாளை (2008.07.31) வியாழன் மு.ப.9 மணி*
*தலைவர்: திரு.சி.இராமலிங்கம் (அதிபர்)*

பிரதம விருந்தினர்:
*வைத்தியகலாநிதி திரு.திருமதி டான் முத்துவேல்*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம். (76776)


# விசேட சிறப்புச் சலுகை

கொம்ப்யூட்டர் டிப்ளோமா கற்கைநெறிகளுக்கான விசேட பிரிவுகள் ஆகஸ்ட் 1ம்,2ம் திகதிகளில் ஆரம்பமாகின்றன.

- Diploma in Ms Office
- Diploma in Web Design
- Diploma in Desktop Publishing
- Dip in Computerised Accounting

*Duration : 3 Months*

இலவச பாட நூல்கள் மற்றும் சர்வதேச தரச் சான்றிதழ்களுக்கான பாடநெறிகள்.

Select any Course & pay 3900/= only

கணக்கியல் துறையில் ஓர் புதிய பரிமாணம்

**Certified Computer Accountant**

உலகின் முன்னணி Accounting Software

50% Special Offer...

Tally ies 9.0

A/L மாணவர்கள், HNDA , AAT, பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் கணக்கியல் துறையில் ஆர்வமுடையவர்கள் அனைவருக்குமான கட்டணச்சலுகை.

**ASIAN-CSC COMPUTER EDUCATION**

| | |
|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் Tel :021 222 5677 | கிளை : கொடிகாமம் வீதி, நெல்லியடி Tel :077-3122198 |


# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



தோற்றம்:
21.10.1922

மறைவு:
30.06.2008

## அமரர் கந்தையா குமரேசு

(இணுவில் மேற்கு, இணுவில்)

*30.06.2008 அன்று வவுனியாவில் அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்பக் குலவிளக்கின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (30.07.2008) புதன்கிழமை இணுவில் மேற்கு, செட்டிவளவு ஒழுங்கையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.*

இந்நிகழ்வில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்வதுடன் நண்பகல் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

கு.கருணாநிதி
இணுவில். (76777)

குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் பூலோகசிங்கம் வெற்றிவேல்

*யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தமது முழு ஆசிரிய சேவையை அர்ப்பணித்தவரும் 1970– 1984 வரை இந்துவின் புகழ்பூத்த அதிபராகவும் சிற்பியாகவும் விளங்கியவரும் நுணாவில் மேற்கு கொல்லன்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் உபதலைவராகவும் தொண்டனாகவும் நற்பணியாற்றியவரும் ஆகிய*

**அமரர் பூலோகசிங்கம் வெற்றிவேல்**

*அவர்கள் 27.07.2008 இல் அமரத்துவம் எய்திய செய்தி ஆழ்ந்த கவலை அளிக்கின்றது. அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அவரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், ஏனைய குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.*

*'அபயகரம்', க.குமாரசுவாமி*
*ஜே.பி. (சம்பந்தி),*
*குடும்பத்தினர்.*

33, செட்டித்தெரு லேன்,
நல்லூர், யாழ்ப்பாணம். (76784)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முத்தமிழ் மன்றத்தின் 'கலைமலர் - 2008' நூல் வெளியீட்டு நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.
நிகழ்வில் நல்லூர் கோட்டக்கல்வி அதிகாரி வீ.குணசேகரம், எழுத்தாளர் செங்கையாழியான் ஆகியோர் உரையாற்றுவதை முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.
நூலின் முதற்பிரதியை கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி வெளியிட்டு வைக்க அதன் முதற் பிரதியை பழையமாணவி திருமதி பரமேஸ்வரி சுப்பிரமணியம் பெற்றுக் கொள்வதை மூன்றாவது படத்தில் காணலாம்.
நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை நான்காவது படத்தில் காணலாம்.
(படங்கள்: லக்ஷ்மன்)

# பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்த பின்பே சி.டி.எம்.ஏ. இணைப்புகளை வழங்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜூலை 30

யாழ்.குடாநாட்டில் உள்ள சி.டி.எம்.ஏ. தொலைபேசி வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்கப் பெற்ற பின்னரே இணைப்புக்கள் மீள வழங்கப்படும்.

ரெலிக்கொம்மின் யாழ்.அலுவலக வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் கடந்த இரு மாதங்களாக சி.டி.எம்.ஏ. தொலைபேசிகள் செயலிழந்துள்ளன.

சி.டி.எம்.ஏ. தொலைபேசி வாடிக்கையாளர்கள் மீண்டும் சேவையைப் பெறுவதற்கு பொலிஸ் அனுமதி (கிளியரன்ஸ்) பெறவேண்டும் என்று வாடிக்கையாளர்களுக்கு ரெலிக்கொம் அறிவுறுத்தல் விடுத்தது.

அதன்படி அதற்குரிய படிவத்தைப் பெற்றுப் பூர்த்தி செய்த பின்னர் கிராம சேவையாளர், பிரதேச செயலர் ஆகியோரின் உறுதிப்படுத்தலுடன் பொலிஸ் அனுமதிபெற்ற வாடிக்கையாளர்கள் அவற்றை மீளவும் ரெலிக்கொம் நிறுவனத்திடம் கையளித்து வருகின்றனர்.

பொலிஸ் அனுமதி பெற்றவர்களின் விவரங்கள் பலாலி படைத் தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. இந்த வாடிக்கையாளர்களுக்கு இணைப்பு வழங்குவதற்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சு ரெலிக்கொம் நிறுவனத்தின் கொழும்புத் தலைமையகத்துக்குத் தெரியப்படுத்தும். அதன் பின்னரே இணைப்புக்கள் மீள வழங்கப்படும் என ரெலிக்கொம் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

முதலில் கிடைக்கப்பெற்ற வாடிக்கையாளர்களின் விவரங்கள் பலாலிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து கிடைக்கப்பெறும் விவரங்கள் பகுதிபகுதியாக அனுப்பி வைக்கப்படும் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (50)

## சரசாலை வடக்கில் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம்,ஜூலை 30

சரசாலை வடக்கு ஐக்கிய நாணய சங்கத்தினர் அப்பகுதியைச் சேர்ந்த நான்கு மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளனர்.

சங்கத்தின் 76ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு சரசாலை வடக்கு முன்பள்ளியில் இடம்பெற்ற நிகழ்வில் புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

சங்க எல்லைப் பரப்பில் வசிக்கும் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற இரு மாணவர்களுக்கும் சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற இரு மாணவர்களுக்கும் புலமைப் பரிசில் வழங்கப்பட்டதாக சங்கத் தலைவர் த.சபாநாயகம் தெரிவித்தார். (203-207)

## உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் தொடர்பாக மாணவர்களிடையே பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூலை 30

மானிப்பாய் பிரதேசசபை, உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் தொடர்பாக மாணவர்களிடையே விழிப்புணர்வுப் பரீட்சை ஒன்றை நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 11 மணி வரை நடத்தவுள்ளது.

பிரிவு ஒன்றில் தரம் 8,9,10 மாணவர்களுக்கும் பிரிவு இரண்டில் தரம் 11,12,13 மாணவர்களுக்கும் பரீட்சைகள் இடம் பெறும்.

இரண்டு பிரிவுகளிலும் அதிக புள்ளிகளைப் பெறும் தலா 3 மாணவர்கள் உள்ளூராட்சிவார இறுதி நிகழ்வில் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை, மானிப்பாய் இந்துக் கல்லூரி,சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, இளவாலை திருக்குடும்ப கன்னியர் மட மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

(203)

## பரிசில்கள் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 30

யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தால் ஆரம்பக்கல்வி மாணவர்களிடையே சைவ விழுமியங்களைப் பேணல் தொடர்பாக நடத்தப்பட்டபோட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.(203-302–111)

## சாவகச்சேரி இந்துவின் முன்னாள் அதிபருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஜூலை 30

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பூ.வெற்றிவேலுவின் அஞ்சலிக்கூட்டம் இன்று காலை 8 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரியின் பெற்றோர், பழைய மாணவர்கள், அன்னாரின் நண்பர்கள் ஆகியோரை இந்த அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் அ.கயிலாய பிள்ளை கேட்டுள்ளார். (203-207)

## ஆள்கள் இல்லாத வீட்டில் தங்கநகைகள் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜூலை 30

வீட்டில் ஆள்களில்லாத வேளையில் உள்ளே சென்ற திருடன் அங்கிருந்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை அபகரித்துச் சென்றுள்ளான்.

இச்சம்பவம் மட்டுவில் மத்தியில் இடம் பெற்றது.

திருட்டுத் தொடர்பாக சுப்பையா கமலம் என்பவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (203-207)

## மயிலணி வித்தியாலய நிறுவுநர் நினைவுநாள்

யாழ்ப்பாணம்,ஜூலை 30

சுன்னாகம் மயிலணி சைவமகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவுநாளும் இன்று புதன் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை விவேகானந்தர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

அதிபர் நா.சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பதில் நூலகர் திருமதி க.இராஜேஸ்வரி கலந்து கொள்வார்.

நினைவுப் பேருரையை சித்த ஆயுள்வேத வைத்திய அதிகாரியும் பழைய மாணவருமான வைத்தியரத்தினம் திருமதி ச.அருமைநாயகம் நிகழ்த்துவார். (203)

## பிரதேசச் செய்திகள்

# விரைவில் பிரதேச செயலகங்கள் தோறும் மனித உரிமைகள் பாதுகாவலர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூலை 30

யாழ்.மாவட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்பிற்கும் நிலையான தீர்விற்குமான விசேட செயற்றிட்டத்தின் கீழ் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மனித உரிமைகள் பாதுகாவலருக்கான பயிற்சிகளை வழங்கவுள்ளது.

இந்தப் பயிற்சிகளை வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பாதுகாவலர்கள் நேர்முகத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சியளிக்கப்படுவர்.

விண்ணப்பதாரர் 20 தொடக்கம் 40 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். சமூகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பொறுப்பு, அனைத்து சமூக மட்டங்களுடன் வேலை செய்யக்கூடிய ஆற்றல் என்பன இருத்தல் வேண்டும்.

அத்துடன், ஆகக்குறைந்தது ஜி.சீ.ஈ. சாதாரணதர கல்வித்தரம் உடையவராகவும் சிறந்த தொடர்பாடல் திறன், தனிப்பட்ட வகையில் சமூகமட்டத்தில் உரிமைகளை பாதுகாக்கும் திறன் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்கள், உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருப்போர் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

ஆர்வமுள்ளோர் விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 4ஆம் திகதிக்கு முன்னர் 'திட்ட அதிகாரி, இடம்பெயர்ந்தோருக்கான விசேட செயற்றிட்டம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இல: 01,3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு திட்ட அலுவலர் தெரிவித்துள்ளார்.

மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் 021 222 5470 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (203)


உதயன்
(மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்)
"யுனிலங்காஸ்" நாட்காட்டி. 32,சென் அன்ரனீஸ் மாவத்தை, கொழும்பு – 13

இணைந்து நடத்தும்!!
வெற்றித் தேர்வு மாபெரும் கருத்தரங்கு – 2008
வெற்றித்தேர்வு திருமலை.எஸ்.கணேசலிங்கம். அவர்களின்
(ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், திருகோணமலை)
இம்முறை தரம்:5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான விசேட செயலமர்வும், கருத்தரங்கும்.

கலந்துகொள்ளும் வளவாளர்கள்:
திரு.எஸ்.கணேசலிங்கம். (உதவிக்கல்விப்பணிப்பாளர், திருகோணமலை)
கலாநிதி செ.திருநாவுக்கரசு (சிரேஸ்ட விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)
திரு.நா.சுவாமிநாதன் (முன்னாள் உதவிக்கல்விப்பணிப்பாளர், விரிவுரையாளர்)
திரு.சரா.புவனேஸ்வரன் (விரிவுரையாளர்)
திரு.கே.தவயோகராசா (யாழ்.முன்னணி ஆசிரியர், சாவ.இந்து.ஆர. பாடசாலை)

| செயலமர்வு நடைபெறும் இடங்கள் | காலம் |
| --- | --- |
| இளங்கலைஞர் மன்றம் சட்டநாதர் வீதி, நல்லூர் | 02.08.2008 சனி காலை 8.30 முதல் 2.30 வரை |
| துரைஐயா மண்டபம் நவாலி வீதி, ஆனைக்கோட்டை | 03.08.2008 ஞாயிறு காலை 8.30 முதல் 2.30 வரை |
| வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை மண்டபம், மாலுசந்தி, நெல்லியடி | 04.08.2008 திங்கள் காலை 8.30 முதல் 2.30 வரை |

பேருந்து ஒழுங்கு தேவைப்படும் பாடசாலைகள் 021 222 2877

செயலமர்வின்போது மாவட்டநிலை 30 முதன்மை மாணவர்களுக்கு உதயன் மெச்சி வழங்கும் பரிசும், பெறுமதிமிக்க சான்றிதழும் உங்களுக்காக

அனுமதி அட்டைகளை சகல புத்தகசாலைகளிலும் இன்று பெற்றுக்கொள்ளலாம்.
வெற்றித்தேர்வு பெறும்பாடசாலைகள். உடன் இவ்விலக்கத்துடன் தொடர்பு கொள்க.
யாழ் மாவட்டம்: 0212229016 0773126807. வடமராட்சி: 0212263815. வலிகாமம்:0773151474
மாதிரி வினாத்தாள், கையேடு,செய்முறைப்பத்திரம் என்பன வழங்கப்படும். கையேடு வெளியில் பெறமுடியாது. இதுவரை நடைபெற்ற வெற்றித்தேர்வு பரீட்சை வினாப்பத்திரங்கள் நுழைவாயிலில் பெறமுடியும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பரிசுத்தரான இறைவனின் திருப்பீடத்தில் பணியாற்றும் உன்னத பேற்றைப் பெற்றவர்கள் பீடப்பணியாளர்கள்

**யாழ்.** தூய மரியன்னை பேராலய புனித ஞானப்பிரகாசியார் பீடப்பணியாளர் சபையினர் தமது 125 ஆவது ஆண்டு நிறைவை இன்று நன்றியோடு நினைவு கூருகின்றனர். யாழ். மறைமாவட்டத்திலே இயங்கும் சபைகளுள் மிகவும் பழமைவாய்ந்ததாக இச்சபை காணப்படுகின்றது. பங்கின் இளம் சிறுவர்களை உருவாக்குவதில் பெரும் பங்காற்றுகின்றது. 1883 ஆம் ஆண்டு அருட்திரு. பிளஷ்ஷோ அடிகளாரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டு "இறைசித்தம் நிறைவேற்ற" என்னும் விருதுவாக்குடன் இயங்கி வருவதுடன் உரோமையில் உள்ள தலைமைச் சங்கத்துடன் நேரடியான தொடர்பினைக் கொண்டு இயங்கி வந்ததும் இதன் சிறப்பம்சமாகும்.

அழைத்தல்களிலே சிறுவர்களுக்குக் கிடைக்கும் உன்னதமான இறை அழைத்தல் பீடப்பணியாளர்களாகப் பணியாற்றுவது ஆகும். பீடப்பணியாளர்கள் திருப்பலியிலும், திருச்சடங்குகளிலும் மிகவும் சிறப்பான ஓர் இடத்தைப் பெறுகின்றார்கள். காரணம் புனிதமான திருச்சடங்குகளைநிறைவேற்றும்அருட்பணியாளர்களுக்கு உதவியாக பீடத்தில் இருப்பவர்கள் இவர்களே.

**யாழ்.புனித மரியன்னை பேராலய புனித ஞானப்பிரகாசியார் பீடப்பணியாளர் மன்றத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

இறைமகன் இயேசு தனக்குப் பின் தனது இறையாட்சிப்பணியைத்தொடர்ந்துமேற்கொள்வதற்குஅப்போஸ்தலர்களையும்சீடர்களையும்அனுப்புகின்றார். பணித்தேவை அதிகரித்தபோது அவர்கள் திருத்தொண்டர்களை அபிஷேகம் செய்து பணிகளைப் பகிர்ந்து கொடுக்கின்றார்கள். அதுபோலவே திருச்சபை வளர்ச்சியடைந்து திருப்பலியையும், திருச்சடங்குகளையும் சிறப்பாக முன்னெடுக்க இறை பணியாளர்களுக்கு உதவிகள் தேவைப்பட்டபோது திருத்தொண்டர்களும், அருட்சகோதரர்களும் இப்பணிகளில் உதவிசெய்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறாகவே சிறுவர்களும் திருவழிபாட்டு வேளையில் பக்தியோடு பீடத்தண்டைத் திருப்பணியாளருக்கு உதவும் பயிற்சியைப்பெற்று பீடப்பணியாளர்களாகின்றனர். இன்று எல்லா நாடுகளிலும் இப் பீடப்பணியாளர்கள் கத்தோலிக்கத் திருச்சபையில் இடம்பெறுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இன்று புலம்பெயர்ந்த நம் தமிழ்பேசும் உறவுகள் பல ஐரோப்பிய நாடுகளில் திருப்பலியிலும் - திருவழிபாடுகளிலும் பங்கெடுக் கும் அதே வேளையில் குறிப்பிடத்தக்களவில் அவர்களுடைய பிள்ளைகள் ஆண்களும், பெண்களும், பீடப்பணியாளர்களாகப் பணிபுரிய அனுமதிப்பது மட்டுமல்லாமல் அதில் நிறைவு காண்பதையும் குறிப்பிடவேண்டும்.

அருட்தந்தைக்கு உதவியாக திருப்பீடத்தின் அருகில் நின்று திருப்பலியில் இறைவனுக்குப் பணிபுரிகின்றோம் என்பதையும், அப்பணியின் உன்னதத் தன்மையையும் ஆன்மீக ரீதியாக உணர்ந்து கொண்டு அந்நிகழ்வை தமக்கு அர்த்தமுள்ளதாக மாற்றவேண்டும். அத்தோடு திருப்பலிக்கு உதவ வரும்போது நேரகாலத்தோடு ஆலயத்திற்கு சமுகம் கொடுத்து நற்கருணை நாதரோடு அமைதியில் உறவாடி ஆன்மீக ரீதியாகத் தயார்ப்படுத்த வேண்டும்.

இறுதியாக சிறுவயதிலேயே பெறுகின்ற பீடப்பணியாளன் என்னும் இவ்வுன்னதமான இறைஅழைத்தல் திருச்சபையில் இறைவனிடத்தில் திராட்சைத் தோட்டத்தில் பணியுரிய கிறிஸ்துவின் குருவாக அழைப்புப் பெறுவதற்கான முதற்படியாக அமையக்கூடும் என்பதை உணர்ந்து கொண்டு இப்பணியைப் பிரமாணிக்கமாகச் செய்ய வேண்டும்.

அன்ரனி

# புற்றுநோய் பாதிக்கப்பட்ட 8 வயதுச் சிறுவன் வகுப்புத் தோழியை மணந்த மறுநாள் மரணம்

## லண்டனில் சோகச் சம்பவம்

லண்டன், ஜூலை 30

புற்று நோயால் பாதிக்கப்பட்ட எட்டு வயதுச் சிறுவனின் கடைசி ஆசையை நிறைவேற்றவகுப்புத்தோழியை அவனுக்கு திருமணம் செய்து வைத்தனர் பெற்றோர்.

கடைசி ஆசை நிறைவேறிய மகிழ்ச்சியில் திருமணம் முடிந்த அடுத்த நாளே மரணமடைந்தான் அந்த சிறுவன்.



லண்டனைசேர்ந்தவர் லோரென் என்ற பெண். இவரது மகன் ரெச்சே பிளமிங். எட்டு வயதுச் சிறுவனான இவனுக்கு 2004இல் உடல் நலக் குறைவு ஏற்பட்டது. மருத்துவமனைக்கு சென்றபோது புற்றுநோய் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. பிளமிங் இன்னும் சில காலம்தான் உயிருடன் இருப்பான் என டாக்டர்கள் கூறி விட்டனர். இதையடுத்து பிளமிங்கின் பெற்றோர் அவனது தேவைகளை கேட்டுக்கேட்டு நிறைவேற்றினர்.

சில மாதங்களுக்கு முன்னர் தனது தாயாரை அழைத்த பிளமிங் என்னுடன் படிக்கும் எல்லேனோர் என்ற சிறுமி மீது எனக்கு மிகவும் விருப்பம். அவளுக்கும் எனக்கும் திருமணம் செய்து வையுங்கள். இது எனது கடைசி ஆசை. இது நிறைவேறாவிட்டால் இறந்தாலும் என் ஆத்மா சாந்தி அடையாது என பெற்றோரிடம் உருக்கமாக வேண்டினான். இதைக் கேட்ட லோரென் அதிர்ச்சி அடைந்தார்.

சம்பந்தப்பட்ட சிறுமியின் வீட்டுக்கு சென்ற லோரென் இதுகுறித்து தயங்கியவாறு அவர்களிடம் தெரிவித்தார். சிறுமி எல்லேனோரின் பெற்றோர் முதலில் திடுக்கிட்டாலும் பின்னர் சுதாகரித்துக் கொண்டனர். பிளெமிங்கின் நிலைமையை நன்கு அறிந்த அவர்கள் திருமணத்திற்குச் சம்மதித்தனர். இதையடுத்து கடந்த 10ஆம் திகதி இருவருக்கும் திருமணம் நடத்த முடிவு செய்யப்பட்டது. இதற்காக பிளமிங்கின் வீடு அலங்கரிக்கப்பட்டது. நெருங்கிய நண்பர்களும், உறவினர்களும் அழைக்கப்பட்டனர்.

ஜொலி ஜொலிக்கும் மணமகள் உடையில் தேவதை போல் பிளமிங்கின் வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தாள் எட்டு வயது சிறுமி எல்லேனோர். கை நிறைய ரோஜா பூக்களுடனும் முகம் நிறைய சந்தோஷத்துடனும் தனது தோழியை வரவேற்றான் பிளமிங். இருவரும் மோதிரம் மாற்றிக் கொண்டனர். திருமண உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். நண்பர்களும், உறவினர்களும் உருக்கமாக வாழ்த்துத் தெரிவித்தனர். தனது கடைசி ஆசை நிறைவேறியதால் பிளமிங்கின் உள்ளத்தில் ஒரு இனம்புரியாத அமைதி ஏற்பட்டது.

திருமணம் முடிந்த அடுத்த நாள் பிளமிங்கின் உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டது. மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவனது உயிர் பிரிந்தது.

அவனது தாயார் லோரென் கூறுகையில், திருமணம் முடிந்ததும் என்னிடம் வந்த பிளெமிங் அம்மா இப்போது என் ஆசை நிறைவேறிவிட்டது. இனிமேல் நிம்மதியாக கண் மூடுவேன் என்றான். அடுத்த நாளே அவனது உயிர் பிரிந்து விட்டது. தற்போது அவன் உயிருடன் இல்லை. இருந்தாலும் அவனது கடைசி ஆசையை நிறைவேற்றிய சந்தோஷம் எனக்கு உள்ளது. - என்றார்.

# நாட்டின் சகல வளங்களையும் அடகு வைத்துவிட்டு இந்தியாவின் காலுக்குள் சுருண்டு கிடக்கும் கேவலம்

## அரசைச் சாடுகிறது ஜே.வி.பி

கொழும்பு, ஜூலை 30

மஹிந்த ராஜபக்ஷவின் அரசு இலங்கையின் பொருளாதாரம், அரசியல், கலாசாரம் உட்படப் பெறுமதிமிக்க வளங்கள் அனைத்தையும் இந்தியாவிடம் அடகு வைத்து விட்டு இந்தியாவின் காலுக்குள் சுருண்டு கிடப்பதாக ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது.

1987 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜயவர்த்தன இந்தியாவிடம் அடிமையாகியதை விடவும் மிகமோசமாக மஹிந்த ராஜபக்ஷ அடிமையாகியுள்ளார் என்றும் இந்தியாவின் உத்தரவின்படியே இலங்கையில் எல்லாம் நடக்கிறது என்றும்- இலங்கையை இந்தியாவின் மாநிலங்களில் ஒன்றாக மாற்றுவதே இந்தியாவின் திட்டம் என்றும் ஜே.வி.பி. மேலும் தெரிவித்துள்ளது.

உடனடியாக இந்த அடிமைத்தனத்தில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ விடுபட வேண்டும் என்று அக்கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் ஜே.வி.பி நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பிரசார செயலாளரும் எம்பியுமான விஜித ஹேரத் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வரலாற்றில் என்றுமில்லாதவாறு இலங்கை மீதான இந்தியாவின் தலையீடு அதிகரித்துள்ளது. இலங்கையின் முக்கிய வளங்கள் உட்பட அனைத்தும் இந்தியாவிடம் அடகு வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பொருளாதாரமும் அரசியலும் இந்தியாவின் விருப்பத்தின் படியே இயங்குகின்றன. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை முக்கியமான வளங்கள் எல்லாம் இந்தியாவின் கைகளில் சிக்கிவிட்டன.

முக்கியமான பொருளாதார வளங்களெல்லாம் இந்தியாவிடம் சென்றுவிடும். எமக்கென்று எவையும் இருக்கப் போவதில்லை.

அதேபோல், அரசியல் நடவடிக்கைகளும் இந்தியாவின் உத்தரவின்படியே தான் இடம்பெறுகின்றன.

இந்தியா எமது அயல்நாடு என்பதால் அந்நாட்டுடன் நட்புறவை வைத்துக் கொள்ளலாமே தவிர அந்நாட்டுக்கு அடிமையாகி விட முடியாது.

1987இல் ஜே. ஆர். ஜயவர்த்தனவும் இந்தியாவுக்கு அடிமையாகி நின்றார். இன்று மஹிந்த ராஜபக்ஷ அடிமையாகி நிற்கின்றார்.

இலங்கையை இந்தியாவின் மாநிலங்களில் ஒன்றாக மாற்றுவதே இந்தியாவின் திட்டம். இத்திட்டத்திற்கு அமைவாகவே இந்திய இராணுவம் 1987 இல் இலங்கைக்கு வந்தது.

இந்தியாவின் அந்தத் திட்டம் அப்போது நிறைவேறாது போனதால் இப்போது அத்திட்டத்தை நிறைவேற்ற இந்தியா மீண்டும் முயற்சிக்கிறது.

அதற்கான அனைத்து வழிகளையும் மஹிந்த ராஜ பக்ஷ திறந்து வைத்துள்ளார். அவரின் இந்த அடிமைத்தனமான செயற்பாட்டை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

மஹிந்த இந்த அடிமைத்தனமான அரசியல் செயற்பாட்டை உடன் கைவிடாவிட்டால் அவருக்கு மக்கள் தக்க பதிலடி கொடுப்பர் - என்றார். (சி)


## மணமகன் தேவை

யாழ்.இந்துகௌரவகுடும்பம், 1983 ஆம் ஆண்டு, செவ்வாய்க்குற்றமற்ற, அச்சுவினி நட்சத்திரம், ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றும் மணமகளுக்கு படித்த, ஒழுக்கமான வெளிநாடுகளில் உள்ள மணமகன் தேவை.

தொடர்பு:- வி.அருளானந்தன்,
இல.10, சிவன் வீதி, திருநெல்வேலி.
T.P.0212228911

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், லண்டனில் தற்போது படித்துக் கொண்டு வேலை செய்யும், குடும்பப் பொறுப்பான, நல்லொழுக்க நற்பண்பான, தீயபழக்கமற்ற, யாழ்ப்பாணத்தில் க.பொ.த உயர்தரத்தில் உயிரியல் விஞ்ஞானம் (Bio Science)வரை கற்ற, கணனியிலும் சில துறைகள் கற்ற, 1979 ஆம் ஆண்டு பிறந்த உயரம், தோற்றம் (Smart) கொண்ட மணமகனுக்கு, நல்ல குடும்பப் பின்னணியுள்ள நல்லொழுக்க, நற்பண்பான, ஓரளவு படித்த, ஓரளவு அழகான, லண்டன், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து நாடுகளில் குடியுரிமையுள்ள (ஸ்பொன்சர் செய்யக்கூடிய) மணமகள் உடன்தேவை.

ஜாதகம், படம், விவரங்களுடன் கீழுள்ள முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

முகவரிகள்:

திருமதி பா. நாகலட்சுமி
பிளாக் வீதி, சங்கானை.
தொ.பே.: 077 3621241

வி.அருளானந்தன்,
இல.10, சிவன் வீதி,
திருநெல்வேலி.
T.P.0212228911

## கண்ணீர் அஞ்சலி

மன்ற அங்கத்தவரான பரம்ஸ் ஸ்ரோர்ஸ் சாவகச்சேரி உரிமையாளர்
திருமதி கு.தர்சினி அவர்களின் அன்புத் தாய்
திருமதி கனகசிங்கம் தர்மராணி
அவர்கள் 26.07.2008 அன்று அகாலமரணமடைந்துவிட்டார். அன்னாரின் மறைவிற்கு எமது மன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது.
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம். (சி/553956)

## கண்ணீர் அஞ்சலி



அறவழிப் போராட்டக் குழுவின்
நுணாவில் கிழக்கு அறவழி தொழில்
பயிலக இல்லத்தின் உரிமையாளரும்,
சாவகச்சேரி இந்துக் கல்லூரியின்
முன்னாள் அதிபருமான
பூலோகசிங்கம் வெற்றிவேலு
அவர்களின் மறைவு குறித்து நாம் எமது
ஆழ்ந்த துயரத்தைக் காணிக்கையாக்குகின்றோம்.
அறவழிப் போராட்டக் குழு,
NVDAG, கைதடி நுணாவில். (76768)

## விற்பனைக்கு

மரவள்ளிக்கிழங்கு சீவும் மெசின் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- சி.குணரத்தினம்
கேணியடி வீதி, மீசாலை மேற்கு, மீசாலை.
T.P.0775194777

## வீடு/காணி விற்பனை

உடுவில் மகளிர் கல்லூரிக்கு மிக அண்மையிலும், சிவஞானப்பிள்ளையார் கோயிலுக்கு எதிராகவும் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள நிலப்பரப்பு 3 குழி 13.5 உ ர் றோட் டுக்குப் போக்குவரத்துச் செய்யும் பாதையுரித்தும் கொண்ட வீடும் காணியும் விற்பனைக்குண்டு. தேவைப் படுபவர்கள் நேரில் வரவும். தரகர் நிராகரிக்கப்படுவர்.
தொடர்பு கொள்ள வேண்டியவரும் தகவல் தருபவரும்:
டாக்டர் திருமதி அ. சுசீலாதேவி,
சிவஞானப்பிள்ளையார் கோயிலடி,
மானிப்பாய் வீதி, உடுவில்.

## விற்பனைக்கு

சம்பறா 110 CC மோட்டார் சைக்கிள் (MP-MB XXXX) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- பெ. செல்வரட்ணம்,
107, A9 வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணம்.
T.P.0776341116

## தவறிவிட்டது

சிவசுப்பிரமணியசர்மா சர்வேசன் என்பவரது தேசிய அடையாள அட்டை (831583320V), விசேட அடையாள அட்டை என்பன வட்டுக்கோட்டை, அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோயிலடியில் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடனோ அல்லது தொலைபேசியுடனோ தொடர்பு கொண்டு அறியத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம். (சி/553954)
சன்மானம் வழங்கப்படும்.
வட்டுக்கோட்டை தபாலகம். T.P.0779902318

## சேவை நலன் பாராட்டு



திருவாளர் சின்னராசா ஆறுமுகராசா
(அலுவலக ஊழியர் - தரம் 1)
1974 - 1982 வரை தொண்டர்
1983 - 2008 வரை நிரந்தர ஊழியர்

எமது கல்லூரியிலேயே 34 வருட அலுவலக ஊழியர் சேவையினையாற்றி இன்று (2008.07.30) புதன் கிழமை ஓய்வுபெறும் திருவாளர் சி. ஆறுமுகராசா அவர்களின் அர்ப்பணிப்புடனும் மனவிருப்புடனும் கூடிய சேவையினைப் பாராட்டுவதுடன் அவர் தனது ஓய்வு காலத்தில் மன அமைதியுடனும் ஆரோக்கியத்துடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. பழைய மாணவர் சங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சபாஷ்' போடுவோம்

**ஷா-அப்பாஸ்** என்ற மன்னன் 1587இல் பாரசீகத்தை (இப்போது ஈரான்) ஆண்டு வந்தான். அவன் மிகுந்த தைரியசாலியாக இருந்ததோடு தந்திரசாலியாகவும் இருந்து வந்தான். எப்பொழுதும் துருக்கிக்கு, பாரசீகத்தின் மீது ஒரு கண். உஸ்பெக்கும் துருக்கிக்கு உதவியாக வரவே, இரு நாடுகளும் சேர்ந்து பாரசீகத்தைக் கைப்பற்ற முயன்றன. ஆனால் ஷா-அப்பாஸோ மிகவும் உஷாராக இருந்தான். எதிர்த்து வென்றான்.

பிறகு 1607இல் இந்தியாவின் மீது படையெடுத்தான் ஷா - அப்பாஸ். அப்பொழுது அரசு செலுத்திய ஜஹாங்கீரிடம் செம்மையாக வாங்கிக் கட்டிக் கொண்டு தோல்வி அடைந்தான்.

ஆனால் அந்தத் தோல்வியை மறைக்க தந்திரம் ஒன்றைக் கையாண்டான். எப்பொழுதும் தான் ஜஹாங்கீரிடம் நட்புப் பாராட்டியே வருவதாகவும் தனக்குத் தெரியாமல் இப்படையெடுப்பு நடந்து விட்டதாகவும் தனக்குத் தெரியாமல் இவ்வண்ணம் சில வீரர்கள் ஜஹாங்கீருடன் போரிட்டதைத் தான் ஒப்புக்கொள்ளவில்லை என்றும், முஸ்லிம்களாகிய நம் இருவருக்குள் யுத்தமாவது! தான் எப்பொழுதுமே ஒற்றுமையாக இருக்கவே விரும்புவதாகவும் ஜஹாங்கீருக்கு ஓலை அனுப்பிவைத்தான்.

தோல்வி தன்னைத் தழுவி இழிவு உண்டாகக் கூடாது என்பதற்காக ஷா-அப்பாஸ் கையாண்ட இம்முறையை ஜஹாங்கீர் மிகவும் பாராட்டினான்; ஷா-அப்பாஸின் புத்திக்கூர்மையை மெச்சினான்.

அது முதல்; மெச்சத்தக்க செயல்களை யார் செய்தாலும் 'ஷா-அப்பாஸ்!' என்று பாராட்டலானான் ஜஹாங்கீர். இந்த 'ஷா-அப்பாஸிலிருந்து' தான் 'சபாஷ்' என்று பாராட்டும் பழக்கம் உண்டாயிற்று.

மகிழ்வான அல்லது மெச்சத்தக்க செயலை ஒருவர் செய்தபோதும் அல்லது கேள்விப்படும்போதும், அன்னாரின் கையைப் பிடித்துக் குலுக்கியோ அல்லது முதுகைத் தட்டியோ 'சபாஷ்' என்கிறோம் அல்லவா! அந்த சபாஷின் சரித்திரம் இதுதான்!

## புரிதல்

சாவு
என்னை
அணைக்கும்
போதுதான்
புரிந்து கொண்டேன்...
என்னைக் காதலித்து
காவு கொண்ட
"உயிர்க்கொல்லி"
நீ யென்று.......

க. நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்.

## ஆறடி நிலம்

அயல் நாட்டவனோ,
உள் நாட்டவனோ - என்ன
வேற்றுமை கிடக்கிறது
நாம் எல்லோருமே
ஆறடி நிலத்தைத் தான்
பகிர்ந்து
கொள்ளப்போகின்றோம்
என்று
தெரிந்துவிட்ட பிறகு?

அ.அமிர்தா
அரியாலை.

## மணலும் பாடுகின்றது

ஆவாலியன் தீவுகள். இந்தப் பெயரை நாம் கேள்விப்பட்டிருப்பதே அரிது. இந் நிலையில் அங்கு பாடும் மணல் இருக்கின்றதாம். இதை அறியவே அதிசயமாக இருக்கின்றதல்லவா?

அங்கு காணப்படும் ஒரு வகை மணலைக் கைகளால் எடுத்து வைத்துக் கொண்டு இரு கைகளையும் தட்டினால் அம்மணல் ஆந்தை அலறுவதைப் போன்ற ஒரு வகையான கீச்சுக் குரலை உண்டு பண்ணுகின்றன.

ஒரு பையில் அம்மணலைப் போட்டுக் குலுக்கினால் நாய் குரைப்பது போன்று ஒலி எழும்புகின்றது.

இவ்வகையான மணல் ஆவாலியன் தீவில் கொலராடோ காடுகளிலேயே அதிகம் உள்ளது.

அக் காடுகளில் காற்றடித்தால் இம் மணல் பறவைகள் பாடுவதைப் போன்று கீச்சுக் கீச்சென்று ஒலியெழுப்புகின்றது.

இம்மணலை நுணுக்குக் காட்டியினூடாக ஆராயும்போது அது உருண்டை வடிவமுடையதாகத் தோற்றமளிக்கின்றது. இம்மணலை மூடியுள்ள ஒரு வகையான காற்றினாலேயே இவ்வாறான ஒலிகள் உண்டாவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.



கல்வியங்காடு. கண்ணதாசன்,

## கொம்பு விரியனைத் தெரியுமா?

பாம்புகள் பற்றி நாம் நிறையவே கேள்விப்பட்டிருப்போம். மலைப்பாம்பு, தண்ணீர்ப்பாம்பு என்று எத்தனையோ வகை இனங்களைப் பாம்புகளிலே பார்த்திருப்போம். அவற்றில் ஒரு வகை இனம் தான் 'கொம்புவிரியன்'.

கட்டுவிரியன், கண்ணாடிவிரியன் ஆகிய இனத்தைச் சேர்ந்ததுதான் கொம்புவிரியன். இதன் தலையின் 'முன்புறத்தில் மிகச் சிறிய கொம்பு ஒன்று வளர்ந்துள்ளது. இதனாலேயே இதற் குக் கொம்புவிரியன் எனப் பெயர் வந்ததாகக் கூறப்படுகின்றது. இதன் கொம்பு சுமார் 5 சென்ரிமீற்றர் வரை வளருமாம்.

இந்த இனப் பாம்புகள் யூகோஸ்லாவியா நாட்டின் சகல பிரதேசங்களிலும், ஆஸ்திரிய நாட்டின் சில பகுதிகளிலும் இத்தாலியிலுள்ள ஆல்ப்ஸ் மலையின் கிழக்குப் பகுதியிலும் அதிகமாகக் காணப்படுகின்றன.

சுண்ணாம்புப் பாறைகள் உள்ள இடங்களையே இது தனது வாழ்விடமாகக் கொண்டுள்ளது. வெப்பமான இடங்களே இதற்கு அதிகம் பிடிக்கும். பகல் வேளைகளில் இது மெதுவாக நகர்ந்து திரியும். நல்ல வெயில் நேரங்களில் அசையாமல் இருந்து கொண்டு தான் முன்பு உண்ட இரையை மீட்டு செரிமானம் செய்து கொள்ளும்.

இதனை யாராவது சீண்டி விட்டால் உடனே சீறிக்கொண்டு வரும். 'உஸ்' என்று ஒலியை எழுப்பிக் கொண்டு தனது நச்சுப் பற்களை எதிரியின் உடம்பில் பதிக்கும்.

இதன் வாயில் இரு நச்சுப் பற்கள் உள்ளன. சாதாரண நிலையில் இப்பற்கள் வாயிலுள்ள பையில் மடிந்து இருக்கும். எதிரியைத் தாக்கும் போது இப்பற்கள் முன்புறமாக நீண்டு எதிரியின் உடலில் ஆழமாகப் பதியும்.

இதே முறையில் தான் சகல விரியன்களும் எதிரியைத் தாக்குகின்றன.

தாவடி. - தாசன்.

## விவேகானந்தர் சந்தித்த முட்டாள்கள்



விவேகானந்தர் ஒரு தடவை ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அப்போது அந்த ரயிலில் பயணம் செய்துகொண்டிருந்த வெள்ளைக்காரப் படையினர் சிலர் துறவிகளைப் பற்றிக் கேலியாகப் பேசிக் கொண்டிருந்தனர். அதற்கு விவேகானந்தர் எதிர்த்துப் பேசவோ அல்லது அவர்களுடன் வாதாடவோ முயலவில்லை.

அவர் செல்லவேண்டிய இடம் வந்ததும் இறங்கிய விவேகானந்தர், ரயில் நிலைய அதிகாரிகளுடன் ஆங்கிலத்தில் உரையாடினார். அதனைக் கண்ட படையினர் 'உங்களுக்குத்தான் ஆங்கிலம் தெரியுமே. நாங்கள் பேசும்போது ஏன் எதுவுமே சொல்லவில்லை' என்றனர். அதற்கு விவேகானந்தர் 'நான் முட்டாள்களைச் சந்திப்பது இது முதல் தடவையல்ல' என்றார்.

குப்பிளான். - சந்தோசன்.

## நட்பு

நடமாடும் பிணமாக
வாழ்ந்த எனக்கு - நட்பின்
ஆழத்தை புரிய வைத்தார்கள்
நண்பர்கள்

அரசியல் முதல் பொருளாதாரம் வரை
நட்பினில் உரையாடினோம்
சொல்ல மறுத்த காதலையும்
நட்பினில் இடம் தேடினோம்

நட்பு எனும் சொல்லுக்குள்
காதல் இடம் பிடிக்க - நண்பர்கள்
காதலுக்கு தூதர்கள் ஆனார்கள்

காதலின் சுகத்தையும் சுமையையும்
நண்பர் செவி சொல்ல
நட்பானது நம் வாழ்வு



கவிஞன் வந்து - என்னிடம்
நட்பா காதலா பெரிது என்ற
சவால்வர - காதலிலும்
உயர்வு நட்பு என்பேன்

நேற்றைக்கு போட்ட
சண்டைமுதல் நாளை
படிக்கும் பாடம் வரை
நட்பினில் உரையாடினோம்


காதலிலும் நட்பினிலும்
எத்தனையோ சுகங்கள் உண்டு
ஆண் பெண் நட்பினை
சமுதாயம் புறம் தள்ளும்
போதிலும் நண்பர்கள்
நாமென்ற உண்மையுடன்
நட்பின் ஆழத்தை
அறிய வைப்போம்.

S.கஜா, 12ஆம் வட்டாரம், நெடுந்திவு.





## ஒளியூட்டும் தீக்குச்சிகள்



இங்கிலாந்தைச் சேர்ந்த ஜோன்வாக்கர் என்பவர்தான் தீக்குச்சியை முதன்முதலாகக் கண்டுபிடித்தார். பொஸ்பரஸ் கலவையைப் பயன்படுத்தியே இவர் தீக்குச்சியை உருவாக்கினார்.

பின்பு 1830ஆம் ஆண்டு அதே நாட்டைச் சேர்ந்த ஜோன்ஸ் என்பவர் கொஞ்சம் மாறுபட்டதாக - எனினும் பொஸ்பரசைப் பயன்படுத்தியே - தீக்குச்சியைக் கண்டுபிடித்தார். இவர்கள் இருவரும் உருவாக்கிய தீக்குச்சிகள் அபாயகரமானதாகவே இருந்துள்ளன. அதாவது எந்த இடத்திலும், எதிர்பாராத விதமாகவும் பற்றிக் கொள்ளக் கூடியதாக, தீவிபத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்துள்ளன.

தொடர்ந்து 1831ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஸாரியா என்பவர் கந்தகமும் பொஸ்பரசும் கலந்த தீக்குச்சிகளை உருவாக்கினார். இது அபாயகரமான தன்மை குறைந்ததாகவே காணப்பட்டன.

1837ஆம் ஆண்டு ஸாரியா தயாரித்த தீக்குச்சிகள் அபாயமற்றவை என்பதை ஆராய்ச்சிகள் மூலம் நிரூபித்த செக்கோஸ்லாவாக்கியா நாட்டைச் சேர்ந்த ஸெக்கி நோஸ்ட் என்பவர் ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலையை சூசி என்ற இடத்தில் முதன் முதலாக ஆரம்பித்தார். இன்று பல்வேறு வகையான வடிவங்களில் இத்தீக்குச்சிகள் நடமாடிக்கொண்டிருக்கின்றன.

## அழகான உறக்கங்கள்





நித்திரை என்றால் பொதுவாக நமக்கு மிகவும் பிடித்தமான விடயம். காலையில் தூக்கத்திலிருந்து விழிப்பதற்கே பலருக்குப் பிடிக்காது.

நமக்கு மட்டுமல்ல. மிருகங்களுக்கும் நித்திரை மிகவும் பிடித்தமான ஒன்று. ஒவ்வொரு மிருகங்களும் விதம் விதமாகத் உறங்குகின்றன.

குறும்புத் தனத்திற்குப் பெயர் பெற்ற ராக்கூன் என்னும் ஒருவகை கீரிப்பிள்ளை சுவாரஸ்யமாகக் குறட்டை விட்டு உறங்கும் இப்பிராணி மனிதரைப் போலவே கனவுகள் காண்பதாக விலங்கியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நாய், பூனை என்பன சுருட்டிக்கொண்டு உடலின் வெப்பத்தைக் காப்பாற்றத் தலையை உடலின் உள் பதித்துத் உறங்குகின்றன. ஆடு, மாடு, மான் போன்றவை நான்கு கால்களையும் மடித்துத் தலையை உடலின் மேல் வைத்து உறங்குகின்றன.

யானை, குதிரை என்பன படுக்காமலேயே உறங்குகின்றன. அதாவது நின்றுகொண்டே உறங்குகின்றன. யானை உறங்கும்போது தன் எடை முழுவதையும் ஒவ்வொரு காலுக்கும் மாற்றி மாற்றி வைத்துக்கொள்ளும்.

பாம்பு வகையைச் சேர்ந்தவை அனைத்தும் உடலைக் 'ஸ்பிரிங்' போல சுருட்டிக் கொண்டு கண்களைத் திறந்த வண்ணமே உறங்கும். சிலவகை மான்கள் உறங்கும்போது தமது சுவாச சக்தியின் மூலம் எதிரி விலங்குகளின் நடமாட்டத்தை உணர்ந்துகொள்கின்றன.

ஐரோப்பாவில் உள்ள கிளிகள் வௌவால்களைப் போலவே கால்களால் மேலே உள்ள கிளைகளைப் பற்றிக் கொண்டு தலை அதன் மார்பைப் பார்த்திருக்குமாறு ஒய்யாரமாகத் உறங்குமாம்.

[illegible] டோ அல்லது தண்ணீரில் அழகாக நீந்திக்கொண்டோ உறங்குகின்றன.

சுறுசுறுப்பிற்குப் பெயர்போன எறும்புகள் மண்ணில் அழகான மணல் படுக்கைகளை - திண்டுகளை - ஏற்படுத்தி சுமார் 3 மணி நேரம் வரை நிம்மதியாக உறங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தறையில் கடத்தப்பட்ட வர்த்தகர் பாழடைந்த வீட்டுக்குள்ளிருந்து மீட்பு

## கடத்தல்காரர்கள் இருவரும் சிக்கினர்

மாத்தறை, ஜூலை 30

மாத்தறை சூரியவெவ பிரதேசத்திலிருந்து குருநாகலுக்குச் செல்லும் வழியில் திக்குவல்லை கந்தரை என்ற இடத்தில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்ட வர்த்தகர் ஒருவர் அதே இடத்திலுள்ள பாழடைந்த வீடொன்றில் மீட்கப்பட்டிருக்கின்றார். வர்த்தகரைக் கடத்தி குறித்த வீட்டில் அடைத்து வைத்துக்கொண்டு, அவரது மனைவியிடம் பணம் கேட்டு மிரட்டினர் என்று கூறப்படும் இரு நபர்களையும், பொலிஸார் கைது செய்திருக்கின்றனர். அவர்கள் கடத்தலுக்குப் பயன்படுத்தினர் என்று நம்பப்படும் 'ட்ரக்' வண்டி ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த கடத்தல்காரர்கள், வர்த்தகரை விடுவிக்க வேண்டுமானால் தமக்கு 6 லட்சம் ரூபா பணத்தை எடுத்துக்கொண்டு மாத்தறைக்கு வரவேண்டும் என்று மனைவியிடம் கூறியிருக்கின்றனர். மனைவி இது குறித்து உடனடியாக மாத்தறைப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார். பொலிஸார் தேடுதல் நடத்தி நேற்று முன்தினம் பாழடைந்த வீடு ஒன்றில் கைகள், வாய் என்பன கட்டப்பட்டு அடைத்து வைக் கப்பட்டிருந்த நிலையில் வர்த் தகரை மீட்டனர்.

இக்கடத்தலுடன் தொடர்புடைய மேலும் நால்வரைத் தேடிப் பொலிஸார் வலைவிரித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (சி)

### திடீர் இடிமின்னல் மின்சாதனங்கள் சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

திடீரென ஏற்பட்ட இடிமின்னல் தாக்கத்தினால் வீட்டில் இருந்த தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி உள்ளிட்ட பலபெறுமதியான மின்னியல் சாதனங்கள் முற்றாக சேதமடைந்தன.

இச்சம்பவம் கடந்த வாரம் கைதடி மேற்கில்சுப்பன்சண்முகம் என்பவரின் வீட்டில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது ஒரு லட்சத்திற்கும் அதிகமான பொருள்கள் சேதமடைந்தன என்று கூறப்பட்டது.

(203-288)


## தென்மராட்சி வலய முன்பள்ளிகளின் கண்காட்சி

இடம்: யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி
காலம்: 01.08.2008- 02.08.2008 இருநாள்கள்
நேரம்: 8.30-3.30 மணி வரை
தலைவர்: திரு.கு.பிறேமகாந்தன்
(வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி)
பிரதம விருந்தினர்: திரு.க.சண்முகலிங்கம்
(முகாமையாளர், மக்கள் வங்கி, சாவகச்சேரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி.

(சி/553913)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 17.03.1983



இறப்பு 23.07.2007

### அமரர் சிவபாலன் தர்மேந்திரன்

திதி: 30.07.2008

ஓர் ஆண்டு சென்றாலும்
ஓராயிரம் ஆண்டுகள் போனாலும்
உம் முகமும் உன் செயலும்
எம் மனதை விட்டு அகலுமோ?

பிரிவால் துயருறும்:
R. கெங்காதரன், T.அஜந்தன்
(மைத்துனர்கள்).

127, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி.

(76639)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 12 . 1962



மறைவு 10 . 08 . 2007

### அமரர் தர்மலிங்கம் சுந்தரமூர்த்தி (சுந்தி)

(இலங்கை மின்சாரசபை, யாழ்ப்பாணம்)

திதி: 30.07.2008

சுந்தரதீபம் அணைந்து ஓராண்டோடியதோ- நின்
உறவுகள் இங்கே நிதமும் வேதனைக் கீற்றால் வெந்து நோகுதையா!
அப்பா வருவாரோ! அவரைக் காண்போமா என்று உன் மழலைகள் இன்றும் ஏங்குதையா!
தேற்றும்வழி தெரியவில்லை தேறும் வழியும் தெரியவில்லை நிலைகுலைந்து வாடுகின்றோம்.

மணல் வீதி,
புலோலி தெற்கு, புலோலி.

(சி/553944)

குடும்பத்தினர்.

## 41ஆம் நாள் நினைவலைகள்



### திருமதி லாசறஸ் பிலோமினம்மா (சேர்மனம்மா)

மண்ணில் மழலையாய்: 19.05.1937 விண்ணில் தெய்வமாய்: 20.06.2008

இந்து சமுத்திர முத்தே தேடுகின்றோம் உம்மை
இரவி மூழ்கும் பொழுதினில் கண்கள் துயில மறுக்கின்றன
காரணம் கருவறையில் காவியம் படைத்த நாயகியே!
கதிகலங்கி யாம் துடிக்க மண் மடியில் துயில்கின்றாயே!
ஒன்பதுள் ஒன்றாகி ஒன்பது மழலைகள் பெற்றீரே!
தொலைவினில் வாழ் மழலைகள் யாம் கதறுகின்றோம்
தொலைபேசியிலும் தொலைத்து விட்டோமே உம் குரலுறவை
காண்போர் உளம் கவரும் கருணை மலர்க் கண்மணியே!
அம்மா உன்னை தேடுகின்றோம் வாராயோ ஒரு முறை
அன்னையே மரி மடியில் நீ துயில்வாய் இது நிச்சயம்
உம் கனிகள் நாம் என்றும் உம்மை மறவோம் அம்மா.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இன்று (30.07.2008) புதன்கிழமை இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.


என்றும் உங்களை மறவாத:
கணவர், [illegible]
பேரப்பிள்ளை[illegible]

இல.16A, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

(76762)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 02 . 01 . 1978



இறப்பு 22 . 07 . 2006

### அமரர் தவராஜசேகரம் தவச்செல்வன் (ராஜன்)

திதி : திரயோதசி

ஆண்டிரண்டுகள் ஆன போதும்
ஆறவில்லை நம் இதயம்
ஆற்றுவார் யாருமில்லை- நீர்
ஆசையோடு ஓடி வந்து
ஆற்றுவாய் எம் மனதை -உன்
ஆசை முகம் காண ஆவலாய் நாம் இங்கே
ஆறாத்துயரில் எமை தவிக்க விட்டு
மீளாத்துயில் கொண்ட எம் அன்புச் செல்வமே!
எமது தவச் செல்வனே!
நாம் உயிருள்ள வரை என்றும் உம்
நினைவுடனே வாழ்வோம்.

உமது ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல வேரக்கேணி முருகனை வேண்டி நிற்கும்:

குடும்பத்தினர்,
க.தவராஜசேகரம் (தந்தை- லண்டன்).

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(76751)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும்

# புலமைப் பரிசில் பரீட்சை

## மாதிரி வினாப்பத்திரம்

திரு.எஸ்.கணேசலிங்கம் - திருமலை.

பெயர்/சுட்டெண் ........................................ வினாத்தாள்-I 45 நிமிடங்கள்

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்க வேண்டும்.

பொருத்தமான உருவின் கீழ் கோடிடுக.

1. கடல் நீரிலும், நன்னீரிலும் வாழும்.
ஊர்ந்து செல்லும்.
ஊனுண்ணியாம்.
நிலத்திலும் வாழும்.




2. வானமீதெழுவேன்.
தபாலெங்கும் கொண்டு செல்வேன்.
ஓய்வில்லாமல் பலரையும் தாங்கிப்போவேன்.
வன்மைப்போரிலும் என்னைமாட்டிவிடுவர்.




இங்கு காட்டப்பட்டுள்ள பொருள்களை இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கலாம். இக் கூட்டங்களை சரியாக காட்டும் விடையைத் தெரிவு செய்க.

3.





1. A C / B D
2. A D / B C
3. A B / D C

4. உருவை நன்கு விவரிக்கும் விடையை தெரிவு செய்க.




1. அறிவு, பொழுதுபோக்கு, தகவல் பெறல்
2. மகிழ்ச்சி, தகவல்பெறல், நேரம்
3. பணம், பொழுதுபோக்கு, அனுபவம்.

5. இவ் உருவில் பெறக்கூடிய ஆகக் கூடிய சதுரங்களின் எண்ணிக்கை யாது?



1. 16 2. 18 3. 17

6. XNMOZ எழுத்துக்கள் முகம் பார்க்கும் கண்ணாடியில் எவ்வாறு அமையும்.

1. ZOMNX 2. XNMOZ (mirrored) 3. XNMOZ

7. நான் 30 அடி வைத்து நடக்கும் போது என் சின்னப்பெண் குழந்தை சித்திராங்கி 20 அடி மட்டுமே வைத்து நடப்பாள். சித்திராங்கி 30 அடி எடுத்து நடக்கும் போது நான் எத்தனை அடி எடுத்து நடப்பேன்.

1. 50 2. 55 3. 45

8. வயது முதிர்ந்த கணவன் மனைவியாகிய இருவரும் அவர்களுடைய புதல்வர்கள் இருவரும் அப் புதல்வர்களுடைய மனைவியர் இருவரும் அந்த புதல்வரின் குடும்பம் ஒவ்வொன்றிலுமுள்ள நான்கு புத்திரர்களும் புது வருட கொண்டாட்டத்திற்கு உணவருந்த உட்கார்ந்தனர். அவ்வாறு உணவருந்தியவர் எத்தனை பேர்.

1. 14 2. 12 3. 16

9. முகுந்தனின் பண்ணையில் கோழிகளும், மாடுகளுமாகச் சேர்ந்து 18 உள்ளன. அவற்றின் கால்களின் எண்ணிக்கை 60 ஆயின் அங்குள்ள மாடுகளின் எண்ணிக்கை யாது?

1. 14 2. 12 3. 16

10. பின்வரும் உருவை வெட்டுவதற்கு ஒரு சதுரக் கடதாசியை குறைந்தது எத்தனை மடிப்புக்களாக மடிக்க வேண்டும்.




1. 2 2. 3 3. 4

11. என்னிடம் சில மாபிள்கள் உண்டு. அவற்றுள் இரண்டைத் தவிர ஏனையவை நீல நிறம், இரண்டை தவிர ஏனையவை சிவப்பு நிறம், இரண்டைத் தவிர ஏனையவை வெள்ளை நிறம், எல்லாமாக என்னிடம் இருந்த மாபிள்களின் எண்ணிக்கை யாது?

1. இரண்டு மாபிள்கள் 2. மூன்று மாபிள்கள் 3. ஐந்து மாபிள்கள்

*இங்குள்ள படங்களை அவதானித்து 12ம் 13ம் வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.*




12. இப்படங்களில் தாவர உண்ணிகளாகவும், எமது நாட்டில் காணப்படும் பிராணிகள் அடங்கிய தொகுதி எது?

1. B, G, H, J 2. H, I, G, J 3. G, B, I, J

13. மனிதனால் ஆக்கப்படுவதும், வெளிநாட்டு உற்பத்திகளாகவும் உள்ள தொகுதி.

1. A, D, C, F 2. A, F, E, C 3. E, D, A, F

14. வாகனங்களின் இரண்டு பக்கங்களிலும் பூட்டப்பட்டிருக்கும் பக்கக் கண்ணாடி. ("சைட்" ஆடிகள்)

1. தளவாடிகள் 2. குவிவாடிகள் 3. குழிவாடிகள்

15. இவ்வரிப்படத்தில் அதிகம் உள்ளவை.

..........................................




16. அடைப்பினுள் தரப்பட்ட எழுத்துக்கள் ஏழைப் பயன்படுத்தி பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்தி இலங்கையிற் புராதன நகரமொன்றின் பெயரைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ர் | க, | ம், | ண், | னு, | தி, | ர |
| த, | ச, | பு, | லை, | ரா, | அ | |

..........................................

17. ஒரே வகுப்பு மாணவிகள் ஐவரில் கீதா ராணியிலும் உயரமானவள், அல்ல விமலா கௌரியிலும் பார்க்க குட்டையானவள். ஆனால் சாரதாவிலும் பார்க்க உயரமானவள் சாரதாவும் ராணியும் ஒரே உயரமானவர்கள் இவர்களில் மிக உயரமானவர் யார்?

1. விமலா 2. கௌரி 3. ராணி 4. கீதா

படத்தினை அவதானித்து விடையைத் தெரிவு செய்து கீறிடுக.




18. மூன்று வாகனங்களையும் ஓட்டத் தொந்தவர்கள்,

1. 10 பேர் 2. 9 பேர் 3. 5 பேர்

19. உந்துருளி மட்டும் ஓடத் தெரிந்தவர்கள்

1. 5 பேர் 2. 6 பேர் 3. 7 பேர்.

சொல் வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம் பெறும் வரிசையின் கீழ் கோடு இடுக.

20.
1. தவில், உடுக்கு, மேளம், றபான்
2. யாழ், வீணை, வயலின், நரம்புக் கருவி
3. மகுடி, புல்லாங்குழல், நாதஸ்வரம், மெலோடிக்கா

21.
1. துடுப்பாட்டம், ஹொக்கி, உதைபந்து
2. நண்டு, இறால், கணவாய்
3. சூரியன், சந்திரன், மெழுகுதிரி

*பழமொழிகளின் கருத்தை வெளிப்படுத்தும் விடையினை தெரிவு செய்து கோடிடுக.*

22. குப்பையிலே கிடந்தாலும் குன்றிமணி மங்காது.
1. குப்பையில் கிடந்தாலும் மினுமினுப்பாக இருக்கும்.
2. உயர்ந்தவர்கள் எப்போதும் தாழ்வான பண்புகளை கொண்டிருக்கமாட்டார்கள்
3. குன்றிமணியின் சிறப்புத்தான் அழகுக்கு காரணம்.


23. முயற் கொம்புக்கு ஆசைப்படுதல்
1. முயற் கொம்பின் பெறுமதி அதிகம்
2. முயற் கொம்பு கிடைப்பதரிது
3. இல்லாத ஒன்றை பெற முயல்தல்

கீழுள்ள வினாவில் ஐந்து நிகழ்வுகள் குறிக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வுத் தொடர் சரியான ஒழுங்கு வரிசையில் காணப்படவில்லை. இதனை ஒழுங்குபடுத்தும் போது நான்காம் இடத்தில் வரும் நிகழ்வை குறிப்பது.

24. சிறுவன் பரீட்சை ஒன்றுக்குப் புறப்படுகின்றான்.
A – *ஆடை அணிகின்றான்*
B – *நீராடுகின்றான்*
C – *உபகரணங்களை சரிபார்க்கின்றான்.*
D – *அதிகாலையில் எழும்புகின்றான்*
E – *பெற்றோரை வணங்குகின்றான்.*


1. B 2. C 3. D

25. கோலத்திற் கேற்ப மூன்றாவது சந்தர்ப்பத்தில் வரவேண்டிய எண்களை கோலத்தில் எழுதுக.




1. 8 2. 10 3. 6

26.




1. 4 2. 8 3. 6

தரப்பட்ட கூற்று உண்மை எனக் கொண்டு தரப்பட்ட விடைகளில் பொருத்தமானதை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

27. படித்தவர்கள் எல்லோரும் விவேகிகள் அல்ல ஆகவே
1. படித்தவர்களில் சிலர் விவேகிகள்
2. படிக்காதவர்கள் எவரும் விவேகிகள் அல்ல
3. டிடிக்காதவர்கள் அனைவரும் விவேகிகள்.

28. குரைக்கிற நாய் ஒரு போதும் கடிக்காது. ஜோன் என்ற நாய் கடிக்காது. ஆகவே
1. ஜோன் குரைக்காது
2. ஜோன் குரைக்கும்.
3. ஜோன் குரைத்துக் கொண்டே கடிக்கும்.


29. பாடசாலை என்பதை நன்கு விவரிக்கும் கூற்று
1. பிள்ளைகள் விளையாடுமிடம்.
2. அறிவை மட்டும் பெறுமிடம்
3. அறிவு, திறன், நல்ல மனப்பாங்குள்ளவர்களை உருவாக்குமிடம்.

பின்வரும் உருக்களினை அவதானித்து அடுத்து வரவேண்டிய உருவை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

30.




31.




32.




33.




*வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்க.*

34. ( பார்வை – கண் ) எனின் ( கேள்வி - ......... )

1. பேச்சு 2. பாட்டு 3. காது 4. வானொலி

35. ( கரும்பு – சீனி ) எனின் ( பதநீர் - ......... )

1. வெல்லம் 2. சர்க்கரை 3. தேன் 4. பனங்கட்டி/கருப்பட்டி

*மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.*

36. எரியும் மின்குமிழில் அவசியம் இருக்க வேண்டியது.

1. கண்ணாடிக்குமிழ் 2. இழை 3. மின்சாரம் 4 ஒளி

37. தோட்டம் ஒன்றில் எப்போதும் இருக்க வேண்டியது

1. மரம் 2. வீடு 3. தரை 4. மனிதர்

38. ஒரு வாங்கில் இருவர் அமர்ந்துள்ளனர். அதில் ஒருவர் மற்றவரின் தந்தை ஆவார். ஆனால் மற்றவர் தந்தையின் மகள் அல்ல. எனின் மற்றவர் முன்னையவருக்கு என்ன உறவு?

1. வேரன் 2. மகன் 3. மருமகன் 4. மருமகள்

39. அமாவாசை நிலவொளியில் அமர்ந்து புத்தகங்களைப் படித்துக் கொண்டிருந்த எனக்கு நேரம் போனதே தெரியவில்லை. இக் கூற்று பிழையானது. இதற்குக் காரணம்.

1. புத்தகம் படிக்க நேரமில்லை
2. புத்தகம் படித்தல் எனது பொழுது போக்கு அல்ல
3. அமவாசையில் நிலாவை காண முடியாது
4. நிலவொளியில் படிக்க முடியாது

40. நாளை புதன்கிழமையாயின் நாளை மறுநாள் வியாழக்கிழமையாகும் நேற்றைக்கு முதல் நாள் என்ன கிழமையாகும்?

1. திங்கள் 2. செவ்வாய் 3. புதன் 4. வியாழன்

40 X 2 ½ = 100 புள்ளிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு கல்விவலய ஆசிரிய ஆலோசகர் சங்க அனுசரணையுடன் கல்வி வளவாளர் நிலையம் அண்மையில் நடாத்திய

க.பொ.த (உயர்தர) முன்னோடிப் பரீட்சை - ஒகஸ்ட், 2008

# தமிழ்

3 மணித்தியாலங்கள்

## தமிழ் - 02, பகுதி - I

முதலாம் பகுதியிலுள்ள மூன்று வினாக்களுக்கும் இரண்டாம் பகுதிகள் ஒவ்வொன்றிலும் இருந்து ஒவ்வொரு வினாவையேனும் தெரிவுசெய்து மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

01. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 350 - 400 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
  அ. பேராசிரியர் சு. வித்தியானந்தனின் தமிழ்ப்பணிகள்.
  ஆ. தகவல் தொழில்நுட்பம்.
  இ. புலம்பெயர் இலக்கியம்.
  ஈ. இலக்கியப் பயன்பாடு.
  உ. 'பிச்சை புகினும் கற்றை நன்றே'

02. அ. பின்வரும் 'அ' உரைப்பகுதியையும் 'ஆ' செய்யுளையும் படித்து அவை ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

ஐம்பூதங்களுள் காற்றுக்குத் தனிச்சிறப்பு உண்டு. மற்றவை தரும் வளம் இல்லாமல் சிலநாள் வாழலாம். காற்றுவளம்-பிராணவளம் இன்றி ஒரு மணித்துளிகூட வாழ இயலாது. உயிர் என்பதே காற்றைக்கொண்டு நாம் செய்யும் உயிர்த்தல் என்ற செயலால் வரும் ஆற்றல்தான். காற்றின் மற்றொரு சிறப்பு, அதற்கு என் நாடு, உன் நாடு என மண்ணுக்கு எல்லை போடுவதுபோல வரையறைசெய்ய முடியாது. தண்ணீருக்கு நிலத்தொடர்பு வந்துவிடுவதால் தனியுரிமையாகிறது. தீ வரையறைக்குள் இருந்தால்தான் நன்மை. வான்வெளியையும் இன்று பிரித்துக்கொண்டுவிட்டனர். காற்று மட்டும் தான் பொதுவாக இருக்கிறது. ஏன்? அது ஓரிடம் விட்டு ஓரிடம் இயங்குகின்றது. பரவுகின்றது, வழங்குகின்றது. தொழிற்சாலையுள்ள இடத்தில் காற்றுத் தூய்மை கெட்டாலும் அங்கு மக்கள் வாழ்கிறார்கள். எப்படி? காற்று பிறஇடங்களிலிருந்து பிராணசக்தியை அங்கு கொண்டுவருகிறது. பொது உணர்வில் எல்லோரையும், எல்லா உயிர்களையும் சமம் என்று கருதி கருணைகொண்டு உணவு வழங்கியும், உடைகொடுத்தும், கல்வியளித்தும், துன்பம்துடைத்தும் பொதுப்பணி செய்பவன் காற்றைப் போல அனைவரையும் வாழவைக்கிறான். மனிதனாக வாழ்பவனுக்கு ஏது துன்பம்?

  1) இப்பகுதியில் ஆசிரியர் கூறியுள்ளவற்றை உமது நடையில் 30 சொற்களில் சுருக்கி எழுதுக.
  2) காற்றின் சிறப்புப்பற்றி ஆசிரியர் யாது கூறுகிறார்?
  3) இப்பந்தி ஊடாக ஆசிரியர் கூறவந்த முக்கிய கருத்து யாது?

ஆ. கற்றறியார் செய்யுங் கடுநட்பம் தாங்கூடி
உற்றுழியுந் தீமைநிகழ்வு உள்ளதே-பொற்றொடீ!
சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூமலர்ந்த
அன்றே மனமுடைய தாம்.

  1) இச்செய்யுள் கூறும் கருத்தை உமது நடையில் 30 சொற்களுக்குக் குறையாமல் விரித்து எழுதுக.
  2) இச்செய்யுள் வலியுறுத்துவது எதனை? எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது?

03. கீழ்வரும் பதினைந்து வினாக்களும் (அ),(ஆ),(இ) என மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலுமிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிந்து எல்லாமாக பத்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

அ. 1) புளுகு, பழகு, துள்ளு, விழு ஆகியவற்றுள் உகரம் இதழ்குவித்து உச்சரிக்கப்படும் சொற்களைக் குறிப்பிடுக.
  2) ஒளி, ஒழி ஆகிய சொற்களின் பொருள்வேறுபாடு புலப்படும் வகையில் அவற்றை வாக்கியங்களில் அமைத்துக்காட்டுக.
  3) முட்புதர், பெறுமவற்றுள், கற்றாண், பொருட்பால் ஆகியசொற்கள் புணர்ந்துள்ளவற்றைச் சந்தி பிரித்துக்காட்டுக்.
  4) விட்டான், கற்றான், பெற்றான், உண்டான் என்பவை எவ்வெவ்வகைகளில் காலம் காட்டுகின்றது என்பதைப் பிரித்துக்காட்டுக.
  5) அரிசி, அவை, அத்து, அது இவற்றுள் அகச்சுட்டினை எழுதுக.

ஆ. 6) ஆசிரியர் மாணவருக்கு பரிசில் வழங்கினார். இங்கு இடம்பெற்ற வேற்றுமை என்ன?
  7) தேடல், தழல், கடித்தல், ஊழல் இவற்றுள் தொழிற்பெயர்கள் எவை?
  8) வாணி சங்கீதம் படித்தாள்.
  அவள் பாடசாலையில் பாடங்கள் படித்தாள்.
  இவ்விரு வாக்கியங்களையும் செயற்பாட்டுவினை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.
  9) "வாழிய பல்லாண்டு" என்பதில் இடம்பெறும் வியங்கோள் வினை எது?
  10) பாடு, வீடு, விடு, பாரு- இவற்றுள் ஏவல்வினையடிகள் எவை?

இ. 11) குரைகடல், மலர்ப்பாதம், முக்கனி, உயிர்மெய் என்பன எவ்வகைத்தொகைகள் எனத் தருக.
  12) 'களவெடுப்பினும் பொய்சொல்லாதே' இங்கு 'உம்' இடைச்சொல் எப்பொருளில் வந்துள்ளது?
  13) மாரிபொழிந்தது, மாரி, சித்திரையாள் வந்தாள், சித்திரை இங்கே இடம்பெறும் ஆகுபெயர்களை எழுதுக.
  14) ஒவ்வொரு மனிதர்களும் பொதுநலம் பேணி வாழ்தல் அவசியம், இவ்வாக்கியத்திலுள்ள இலக்கண வழுவைத் திருத்தி எழுதுக.
  15) நான் பரீட்சைக்காக படித்துக்கொண்டிருக்கிறேன்.
  நான் பரீட்சை எழுதமுடியுமோ? தெரியவில்லை.
  இவ்வாக்கியங்களை நிரப்புத் தொடரைப் பயன்படுத்தி இணைத்துக்காட்டுக.

## தமிழ் - 02, பகுதி - II

04. அ. சங்ககால இலக்கியங்களை வகைப்படுத்துக.
  ஆ. சங்ககால இலக்கியப் பண்பிற்கும், சங்கமருவியகால இலக்கியப் பண்பிற்கும் இடையேயான வேறுபாட்டை விளக்குக.

05. அ. சோழர்காலம், காவியகாலம் என்பதற்கான காரணங்களைத் தருக.
  ஆ. நாயக்கர்கால சிற்றிலக்கியங்களின் பண்புகளை எழுதுக.

06. அ. 'ஐரோப்பியர் காலம்-உரைநடைவளர்ச்சிக் காலம்' ஆராய்க.
  ஆ. ஐரோப்பியகால உரைநடை வளர்ச்சிக்கு அச்சு இயந்திரங்களின் பங்களிப்பை விளக்குக.

## தமிழ் - 02, பகுதி - III

07. அ. ஆரியச்சக்கரவர்த்தி காலம்வரை எழுந்த நூல்களை வகைப்படுத்துக.
  ஆ. அவற்றின் முக்கிய பண்புகளை விளக்குக.

08. அ. இலங்கைத் தமிழ் நாவலின் தோற்றம் பற்றிச் சுருக்கமாக குறிப்பிடுக.
  ஆ. இருபதாம் நூற்றாண்டின் இலங்கைத்தமிழ் நாவல் வளர்ச்சி பற்றி எழுதுக.

09. பின்வருவோருள் யாரேனும் இருவர் இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.
  அ. மஹாகவி.
  ஆ. பாவலர் துரையப்பாப்பிள்ளை.
  இ. பூதந்தேவனார்.
  ஈ. பேராசிரியர் ம.மு.உவைஸ்.
  உ. வித்துவான் இ.கணேசையர்.

(முற்றும்)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை - ஒகஸ்ட், 2008
கொழும்பு கல்விவலய ஆசிரிய ஆலோசகர்சங்க அனுசரணையுடன் கல்வி வளவாளர் நிலையம் அண்மையில் நடாத்திய முன்னோடிப் பரீட்சை

# அரசியல் மூலத்தத்துவங்கள்

1 மணித்தியாலம்

## அரசியல் மூலத்தத்துவங்கள் - 02, பகுதி - I

ஒவ்வொரு வினாவிற்கும் தரப்பட்டுள்ள விடைகளுள் சரியானதைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

**இல 01 முதல் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் நான்கு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. அவற்றுள் ஒன்று வினாவின் தலைப்புக்குப் பொருத்தமற்றதாகும். பொருத்தமற்ற கூற்றைத் தெரிவுசெய்க.**

01. பிரித்தானிய குடியேற்ற நாட்டாட்சிக் காலப்பகுதியில்,
  1) நெல் விவசாயத்தை விருத்திசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
  2) ஆங்கிலக்கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.
  3) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அறிமுகம் செய்யப்பட்டது.
  4) ஒரு சுதந்திரமான ஊழியச் சந்தை உருவாக்கப்பட்டது.

02. 1833 கோல்புறூக் கமெரன் சீர்திருத்தத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட அரசாங்க நிறுவனங்களாவன,
  1) சட்ட நிருபண சபை. 2) சட்ட நிர்வாக சபை.
  3) உயர் நீதிமன்றம். 4) மந்திரிசபை அறிமுகம்.

03. 1833 கோல்புறூக் கமெரன் சீர்திருத்தத்தின் கீழ்,
  1) கண்டி, கரையோர மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டன.
  2) சுதேச முதலாளித்துவ வகுப்பு தோற்றம் பெற்றது.
  3) இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டது.
  4) சுய பாசாக் கல்வி அபிவிருத்தியடைந்தது.

04. 1910 ஆம் ஆண்டு அரசியல் சீர்திருத்தம்,
  1) சொத்துடையவர்களுக்கும், கல்வியறிவுடையவர்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.
  2) படித்த இலங்கையருக்கான தேர்தலில் சேர்.பொன்.இராமநாதன் வெற்றிபெற்றார்.
  3) 1912 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது.
  4) உத்தியோகப் பற்றுள்ளவர்களைவிட உத்தியோகப் பற்றற்றவர் எண்ணிக்கை அதிகரித்தது.

05. 1921 மனிங் அரசியல் சீர்திருத்தம்,
  1) சட்டசபையில் அங்கத்தவர் எண்ணிக்கை 37 ஆகும்.
  2) உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தவர்களை விட உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர் எண்ணிக்கை அதிகரித்தது.
  3) பிரதேச ரீதியாக அங்கத்தவர்கள் முதன்முதலில் தெரிவுசெய்யப்பட்டமை.
  4) சட்ட நிர்வாக சபையில் 4 உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்கள் இடம்பெற்றனர்.

06. 1924 இன் மனிங் அரசியல் திட்டம்,
  1) இலங்கை தேசிய காங்கிரஸின் செல்வாக்கிற்குட்பட்டது.
  2) வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை நீக்கியது.
  3) முதன்முறையாக சட்ட நிருபண சபையில் தெரிவுசெய்யப்பட்டவர்களில் பெரும்பான்மையை உருவாக்கியது.
  4) 49 அங்கத்தவர்களைக் கொண்டதாகச் சட்டசபை மாற்றப்பட்டது.

07. டொனமூர் அரசியல் யாப்பு,
  1) மந்திரிசபையின் கூட்டுப்பொறுப்பு என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது.
  2) தலைவர்களுக்கு 7/10 பங்கு அதிகாரத்தை வழங்கியது.
  3) வகுப்புவாத அரசியலைத் தளர்ச்சியடையச் செய்தது.
  4) அரசாங்க சபையிடம் இருந்து நிர்வாக சட்ட ஆக்கக் கடமைகளை எதிர்பார்த்தது.

08. டொனமூர் யாப்பின் தேசாதிபதி,
  1) 1931 - 1936 இற்குமிடையில் மூன்று அரசாங்க உத்தியோகத்தர்களுடனும் நெருக்கமாக செயற்பட்டார்.
  2) அரசாங்க சபையைக் கலைக்கும் அதிகாரம் காணப்படவில்லை.
  3) தேசாதிபதி சம்மதம் வழங்கும்வரையும் எந்தச் சட்டமும் நடைமுறைக்கு வராது.
  4) அரசாங்க சபையின் அனுமதியுடனும் ஆலோசனையுடனும் சட்டங்களை இயற்றுவார்.

09. அரசாங்க உத்தியோகத்தர்கள்,
  1) நிதி பிரதம சட்டக் காரியதரிசிகளாவர்.
  2) பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் காவல் நாய்கள் என வர்ணிக்கப்பட்டனர்.
  3) மந்திரி சபைக்குள் மந்திரியாகச் செயற்பட்டனர்.
  4) ஏனைய ஏழு துறைகளின் செயற்பாட்டிற்கு ஆரம்பம் முதல் பூரண ஒத்துழைப்பை வழங்கினர்.

10. டொனமூர் அரசியல் யாப்பின்கீழ் உருவாக்கப்பட்ட அரசாங்கசபை,
  1) 61 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.
  2) 50 அங்கத்தவர்கள் பிரதேசரீதியாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.
  3) மந்திரிசபையை அகற்றுவதற்கு அதிகாரம் கொண்டிருக்கவில்லை.
  4) வரவு-செலவுத் திட்டத்தை நிராகரிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

**இல 11 முதல் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் நான்கு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.**

11. டொனமூர் நிர்வாகக் குழுமுறை,
  A ஏழு நிர்வாகக் குழுக்கள் இலங்கையரிடம் ஒப்படைக்கப்பட்டன.
  B ஒழுங்கமைந்த கட்சிமுறை வளர்ச்சியடையாமையால் சிபார்சு செய்யப்பட்டது.
  C இலங்கையின் அரசியல் தலைவர்களுக்கு பயிற்சிக்கழகமாக அமைந்தது.
  D நிர்வாகக் குழுத் தலைவர்கள் ஒருமித்த கருத்துடன் செயலாற்றினர்.
  1) DAB 2) ABC 3) BCD 4) ACD

12. சோல்பரி யாப்பு,
  A பிரித்தானியப் பாராளுமன்றத்தால் 1946 இல் அங்கீகரிக்கப்பட்டது.
  B 1972 முதலாம் குடியரசு யாப்பின் மூலம் அகற்றப்பட்டது.
  C சட்டத்துறையானது அரசின் உயர் நிறுவனமாக்கப்பட்டது.
  D பாராளுமன்றம் இயற்றிய சட்டங்களை நீதிப் புனராய்வுசெய்யும் அதிகாரம் காணப்பட்டது.
  1) ABD 2) ABC 3) BCD 4) ACD

13. சோல்பரி முறையின்கீழ்ப் பிரதம மந்திரி,
  A மகா தேசாதிபதி பிரதம மந்திரியின் சிபார்சால் நியமிக்கப்பட்டார்.
  B பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மைபெற்ற கட்சியின் தலைவர்.
  C மகாதேசாதிபதியால் நியமனம் செய்யப்பட்டார்.
  D ஒருதலைப் பட்சமாக அரசியல் யாப்பை நீக்கும் அதிகாரம் கொண்டிருந்தார்.
  1) BCD 2) ABD 3) ACD 4) ABC

14. சோல்பரி யாப்பின் பாராளுமன்றம்,
  A ஈரவை உடைய பாராளுமன்றம். B கீழ்சபை 101 உறுப்பினர்களைக் கொண்டது.
  C மந்திரி சபையைப் பதவிநீக்கும் அதிகாரம் பெற்றிருந்தது.
  D அரசாங்கப் பணப்பைமீது அதிகாரம் பெற்றிருக்கவில்லை.
  1) ABC 2) ABD 3) BCD 4) ACD

15. *சோல்பரி யாப்பின் கீழிருந்த மந்திரிசபை,
  A கீழ் சபையில் இருந்தே அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.
  B கூட்டுப் பொறுப்புக் கொள்கை பின்பற்றப்படவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.
  C பிரதமர் வெளிவிவகாரம், பாதுகாப்பு ஆகிய துறைகளுக்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.
  D நீதி அமைச்சர் செனட்சபையில் இருந்து நியமிக்கப்படுவதுடன் இரண்டு பேருக்குக் குறையாத அமைச்சர்கள் செனட்டில் இருந்து தெரிவுசெய்யப்பட வேண்டும்.
  1) ABC 2) ACD 3) BCD 4) ABC

16. சோல்பரி யாப்பின்கீழ் மகாதேசாதிபதி,

(இந்த வினாத்தாளின் தொடர்ச்சி இனியும் வரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.பற்றிக்ஸ் 102 ஓட்டங்களால் யாழ்.இந்துவை வென்றது

## டிலக்ஸன் அரைச்சதம் போட்டார்



டிலக்ஸன்

வலி.வடக்கு, ஜூலை30

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப் பாணப்பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் 17 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்றில் 102 ஓட்டங்களால் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரியும்மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுக்களை இழந்து 271 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

கமில்டன் இரண்டு நான்குகளுடன் 40, வேயெல்சன் ஒரு ஆறு, ஏழு நான்குகளுடன் 36, சயீந்திரன் ஆறு நான்குகளுடன் 43, மிலான்டோ ஒரு ஆறு, நான்கு நான்குகளுடன் 32, நவதீபன் இரண்டு ஆறுகள் ஒரு நான்குடன் 29, ஜெகன் மூன்று நான்குகளுடன் ஆட்டமிழக்காது 25, ஜெபர்சன் ஒரு ஆறு, மூன்று நான்குகளுடன் 21ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாக 30 ஓட்டங்கள் பெறப்பட்டன.

நிரூசன் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 53 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், மயூலக்சன், திருத்தணிகன் 10 ஓவர்கள் பந்து வீசி முறையே 59, 71 ஓட்டங்களைக் கொடுத்து தலா 02 விக்கெட்டுக்களையும், அச்சுதன் 10 ஓவர்கள் பந்து வீசி 39 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

272 என்ற கூடிய ஓட்ட எண்ணிக்கையை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 49 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 169 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

டிலக்சன் இரண்டு ஆறுகள், நான்கு நான்குகளுடன் 57, நிரூசன் மூன்று நான்குகளுடன் 28, மரியதாசன் 21 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 34 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சஜீந்திரன் 09 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் மிலாண்டோ 10 ஓவர்கள் பந்து வீசி 05 ஓட்டமற்ற ஓவர்களுடன் 25 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் ஜெரிஜோன்சன் 10 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 25 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கோகுலன் 06 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 13 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள் (86)

# சென்ரலை 3 விக்கெட்டுக்களால் யாழ்ப்பாணக் கல்லூரி வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை30

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்திவரும் சுற்றுப் பேட்டியில் 15 வயதுப் பிரிவினருக்கான ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணக் கல்லூரி 3 விக்கெட்டுக்களால் யாழ். மத்திய கல்லூரியை வென்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும், யாழ்ப் பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது.

லக்ஸன் மூன்று நான்கு உட்பட 30 ஓட்டங்களையும், கோகுலன் 3 நான்கு உட்பட27 ஓட்டங்களையும், சகேஸ்காந் 1 நான்கு உட்பட 15 ஓட்டங்களையும், தனோஜன் ஆட்டமிழக்காமல் 3 நான்கு உட்பட 15 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 48 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பென்டில்கரன் 10 ஓவர்கள் பந்துவீசி 1 ஓட்டமற்ற ஓவருடன் 37 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், பவகுகன் 10 ஓவர்கள் பந்து வீசி 1 ஓட்டமற்ற ஓவருடன் 33 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், எம்.மதுசன் 10 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவருடன் 39 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், பென்ஜோ 6 ஓவர்கள் பந்துவீசி 1 ஓட்டமற்ற ஓவருடன் 21 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

173 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 45.1ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 178 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்கையடைந்தது. துடுப்பாட்டத்தில் பென்ஜோ 5 நான்குகள் உட்பட 32 ஓட்டங்களையும், எம்.மதுசன் 6 நான்குகள் உட்பட 30 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 48 ஓட்டங்கள் பெறப்பட்டது.

லக்ஸன் 10 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவருடன் 35 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும், சிறிவாணன் 4 ஓவர்கள் பந்து வீசி 1 ஓட்டமற்ற ஓவருடன் 16 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் தனோஜன் 10 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர். (1)

களை கட்டுகிறது
பாடசாலைகளின்
கிரிக்கெட்
கொண்டாட்டம்
துடியன்

# எழுவைதீவு பத்திமா வி.கவை வென்று கேடயம் சுவிகரித்தது வேலணை ஐயனார்

யாழ்ப்பாணம், ஜூலை 30

அனலைதீவு அருணோதயா விளையாட்டுக் கழகம் நடத்திய உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வேலணை ஐயனார் விளையாட்டுக்கழகம் இலகுவாக வென்று வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டது.

வேலணை ஐயனார் விளையாட்டுக்கழகம் அனலைதீவு அருணோதயா விளையாட்டுக் கழகத்தை 4:0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்திற்குத் தெரிவாகியது.

எழுவைதீவு பத்திமா விளையாட்டுக் கழகம் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகத்தை 2:0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்திற்குத் தெரிவாகியது.

இறுதி ஆட்டத்திற்குத் தகுதிபெற்ற ஐயனார் விளையாட்டுக் கழகமும், எழுவைதீவு பத்திமா விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி 20 நிமிடங்களில் ஐயனார் வி.கழகம் கோல் அடிக்க எழுவைதீவு பத்திமா திண்டாட ஆரம்பித்தது. ஆனாலும் உறுதியுடன் போராடிய எழுவைதீவு பத்திமா அணி முதல் பாதி ஆட்டத்தில் கோல் எதுவும் போடவில்லை.

மீண்டும் வேலணை ஐயனார் அசத்தலான கோல் அடித்து முதல் பாதி ஆட்டம் 2:0 என்ற கணக்கில் முடிவடைந்தது.

இடைவேளையின் பின்னர் எழுவைதீவு பத்திமாவுக்குக்கிடைத்தசந்தர்ப்பங்கள் அனைத்தையும்நழுவவிட வேலணை ஐயனார் விளையாட்டுக் கழகம் தனக்குக் கிடைத்த அனைத்துச் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தி 3 கோல் போட்டு மொத்தமாக 5:0 என்ற அடிப்படையில் எழுவைதீவு பத்திமா விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

32 கழகங்களுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் 1 ஆம் இடத்தை வேலணை ஐயனார் விளையாட்டுக் கழகமும் 2 ஆம் இடத்தை எழுவைதீவு பத்திமா விளையாட்டுக் கழகமும் 3 ஆம் இடத்தை தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகமும் 4 ஆம் இடத்தை அருணோதயா விளையாட்டுக் கழகமும் பெற்றுக் கொண்டன. (1 - 325)

விளையாட்டு அரங்குகளில்

# மலேசியாவில் வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி; தெல்லிப்பழை யூனியன் அணிகளுக்கு அழைப்பு

வலி.வடக்கு, ஜூலை 30

மலேசியாவில் இடம்பெறவுள்ள வலைப்பந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்குத் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 15, 17 வயது அணிகளுக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது.

மலேசியாவின் "யூனிவேர்சிட்டி செயின்" வலைப்பந்தாட்ட அமைப்பின் 18 ஆவது சுற்றுப்போட்டியில் கலந்துகொள்வதற்கான அழைப்பினை அகில இலங்கைப் பாடசாலைகள் வலைப்பந்தாட்ட சம்மேளனம் யூனியன் கல்லூரிக்கு விடுத்துள்ளது.

போக்குவரத்துச் செலவினைக் கல்லூரியே ஏற்கவேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளமையால் இரண்டு அணிகளையும் கொண்டு செல்வதில் பெரும் நிதிப் பிரச்சினைக்குக் கல்லூரி முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக இறுதி முடிவை எடுக்கப் பழைய மாணவர் சங்கத்திடம் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-86)

# பட்மின்ரன் போட்டிகள் மாகாண மட்டத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 30

தேசிய மட்டத்தில் நடத்தப்படவுள்ள கனிஷ்ட பிரிவு பட்மின்ரன் போட்டிக்கு முன்னோடியாக மாகாண மட்டத்தில் சுற்றுப் போட்டி அடுத்தமாதம் நடத்தப்படவுள்ளன.

ஆண்கள், பெண்கள் பிரிவுகள் என இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இச் சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 4 ஆம் திகதிக்குமுன்னர்கையளிக்கும்படி யாழ்.மாவட்ட பட்மின்ரன் சங்கம் கேட்டுள்ளது. (1)

## நல்லூர் கோட்டத்தில் தாச்சி, உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

நல்லூர் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் உதைபந்தாட்டம், தாச்சி ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் தமது விண்ணப்பங்களை நாளை வியாழக்கிழமைக்குள் சமர்ப்பிக்குமாறு கோட்டக்கல்வி அதிகாரி கேட்டுள்ளார். (1)

## மாநகரசபை முன்பள்ளி விளையாட்டுபோட்டி நாளை

நல்லூர், ஜூலை 30

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ். மாநகராட்சி மன்றம் நடத்தும் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும்.

யாழ்.மாநகராட்சி மன்ற ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையில் மாநகர சபை முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத் தலைவரும் மாநகர சபையின் முன்பள்ளி ஆணையாளருமான சி.வி.கே.சிவஞானம், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், நல்லூர் பிரதேச செய லர் பா.செந்திநந்தனன், யாழ். பிரதேச செயலர் ம.ஜெகூ ஆகியோர் கலந்துகொள்வர்.

மாநகரசபையின் செயலாளர் இ.இரத்தினசிங்கம், சனசமூகநிலைய மேற்பார்வையாளர் து.சோமசுந்தரம் ஆகியோரும் நிகழ்வில் உரையாற்றுவார்கள். (1-111-302)

# ஒலிம்பிக் நினைவுகள் 1

உள்ளக் கிளர்ச்சியும், உடலுக்கு எழுச்சியும், வாழ்க்கைக்கு ஆண்டாண்டு மகிழ்ச்சியும் தருபவை விளையாட்டுப் போட்டிகள். சாதி, மத, பேதங்கள் கடந்த ஏற்றத்தாழ்வு ஏறிட்டுப் பார்க்காத மனித இனத்தின் வலிமைக்கு வடிகாலாகத் திகழ்பவை விளையாட்டுப் போட்டிகள்.

நூற்றுக்கணக்கான நாடுகள் மனித நேயத்துடன் கலந்துகொள்ள ஆயிரக்கணக்கான வீரர், வீராங்கனைகள் ஆர்வத்துடன் போட்டியிட, கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பந்தயக் களத்தில் பல கோடிக்கணக்கான மக்கள் குதூகலத்துடன் கண்டுகளிக்கும் விளையாட்டுகளில் பிரதானமானது ஒலிம்பிக் போட்டி.

முதலாவது நவீன ஒலிம்பிக் போட்டி 1896ஆம்ஆண்டு ஏதென்ஸில் (கிரீஸ்) தொடங்கியது. அதுமுதல் தொடர்ந்து ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன. இடையே உலகப் போர் காரணமாக இரண்டு தடவைகள் போட்டிகள் நடைபெறவில்லை.

இந்நிலையில் 29 ஆவது ஒலிம்பிக் போட்டி சீனத் தலைநகர் பீஜிங்கில் எதிர்வரும்ஓகஸ்ட் 8முதல்24ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. அதற்காக பிரமாண்டமான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது சீனா.

ஒலிம்பிக் போட்டிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பமாகின்றன. இன்னும் 9 நாள்களே எஞ்சியுள்ளன. இதுவரை காலமும் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் நடந்த சில சுவாரஸ்யமான சம்பவங்களை எதிர்வரும் நாள்களில் தொடர்ந்து இங்கே நீங்கள் எதிர் பார்க்கலாம்.

1960 ஆம் ஆண்டு இத்தாலியின் ரோம் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டில் நடந்த உணர்ச்சிபூர்வமான சம்பவம் இது.

இராணுவ வீரர்கள் தீப்பந்தம் ஏந்திவர நடைபெற்றது மரதன் ஓட்டம். பகலில் வெயிலின் கொடுமையைத் தவிர்க்க போட்டி, மாலையில் நடத்தப்பட்டது. அதில் வெறுங்காலுடனேயே ஓடி தங்கம் வென்று சாதனை படைத்தார் ஆபிரிக்க வீரர் அபெபெ பிகிலா.

போட்டியின் கடைசி சில மைல்களில் இருவர் மட்டுமே களத்தில் இருந்தனர். ஒருவர் பிகிலா. மற்றொருவர் மொரோக்கோவின் ராடி பென் அட்பெஸ்ஸலம். கடைசியில் பரபரப்பாக 26 விநாடிகள் வித்தியாசத்தில் அட்பெஸ்ஸலமைத் தோற்கடித்தார் பிகிலா.

இதன் மூலம் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற முதல் ஆபிரிக்கர் என்ற பெருமையையும் பெற்றார். அது உலக சாதனை நேரமாகவும் அமைந்தது. 2 மணி 15 நிமிடம் 16 விநாடிகளை அவர் எடுத்துக்கொண்டார்.

வெறும் காலுடன் ஏன் ஓடினீர்கள் எனக் கேட்டதற்கு, "எதியோப்பியர்கள் மன உறுதியால் மட்டுமே வெல்கிறார்கள் என்பதை உலகுக்கு உணர்த்தவே அப்படி ஓடினேன்" - என்றார் பிகிலா.

இடையில் நோய்வாய்ப்பட்டாலும் அதையும் வென்று அடுத்து ஜப்பான் டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக்கிலும் தங்கம் வென்றார். அடுத்தடுத்து இருமுறை தங்கம் வென்ற முதல் வீரர் என்ற புகழையும் பிகிலா பெற்றுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்வேலி-மாசிவன்

# ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம்



நிகழும் மங்களகரமான சர்வதாரி வருடம் ஆடித் திங்கள் 9 ஆம் நாள் (24.07.2008) வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெற்று வருகின்றது , இறுதி நாளன்று (04.08.2008) திங்கட்கிழமை ஆடிப்பூரத் தினத்திலே அம்பாளுக்கு மணவாளக் கோலத் திருவிழா நடைபெற்று இனிது நிறைவு பெறும்.

அடியவர்கள் அனைவரும் வருகை தந்து தரிசித்து அம்பாளின் அருட்கடாட்சத்தினைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு:- மேற்படி ஆலயத் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் அடியவர்கள் தங்களாலான பொருள்கள், நிதி உதவிகளை வழங்குவதோடு நிதியினை நேரடியாகச் செலுத்த முடியாதவர்கள் எமது கணக்கிலக்கம் A/C No. 8127005500 COMMERCIAL BANK, JAFFNA என்ற கணக்கிலக்கத்துக்கு அனுப்பி வைப்பதோடு E-மெயில் masivan.meenadshi@gmail.com என்ற முகவரிக்கு அறியத்தரலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"பொன் மிகுந்தோர் பொற் குகை தாரீ
பொருள் மிகுந்தோர் காசுகள் தாரீ"

நிர்வாகசபை.

மாசிவன்,
நீர்வேலி மேற்கு.

உற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்:

| சாரங்கா நகை மாடம் | வினோ நகைப் பூங்கா | ஷாம்பவி பதிப்பகம் நீர்வேலி |
|---|---|---|
| 157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | 185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | 276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |


## அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை30

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட இணுவில் இந்துக் கல்லூரியில் நிலவும் அதிபர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

தகுதியானோர் வலிகாமம் வலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்க முடியும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன்தெரிவித்துள்ளார். (203)


# புதிய பிரிவுகள் ஆரம்பம்

**External Degree** (Jaffna University)

1st in Com, B. Com. (part 1),
B. Com. (part 11), B.Com. (final)

பிரிவுகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன

| | |
|---|---|
| கணக்கீடு :- | முகுந்தன், சிவகுமார் |
| முகாமைத்துவம்:- | உமாகாந் |
| பொருளியல்:- | இராஜேஸ்வரன் |
| கணிதம்:- | அம்பிகைபாகன் |
| ஆங்கிலம்:- | நிசாந்தன் |

மேலதிக விவரங்களுக்கு:-

**Jaffna College Undergraduate Dept.**
464, Hospitsl Road,
(Near Commercial Bank)
Jaffna.

MJ MAHARAJ



உள்ளூர் VAN சேவை

1 km = Rs.40

உடன் அழையுங்கள்

222 6659, 077 3114803, 222 9653

(76094)

# உங்கள் பிள்ளை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுகிறாரா?

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

இதோ!
அரிய சந்தர்ப்பம்
உங்கள் கணக்கு
மீதி இரட்டிப்பு



அப்படியானால், ஒவ்வொரு பாடசாலையிலும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பாக தேர்ச்சிபெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பணப்பரிசில்கள் உங்கள் குழந்தைக்கும்.

முதலாம் இடம் ரூபா 10,000/-

இரண்டாம் இடம் ரூபா 7,500/-

மூன்றாம் இடம் ரூபா 5,000/-

அத்தோடு, உங்கள் குழந்தை மாவட்டத்தில் முதல் இடத்தில் சித்தியெய்தால் அவனது / அவளது அருணலு கணக்கு மீதி இரண்டு மடங்காக அதிகரிக்கப்படும். (அதிகூடிய தொகை ரூபா. 50,000/-க்கு உட்பட்டதாகும்).

- இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறும் திகதியன்று, உங்கள் குழந்தையின் பெயரில் உள்ள அருணலு சிறுவர் கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- கணக்கு மீதியை பேணுவது மட்டுமே.
- இதுவரையில் உங்கள் பிள்ளையின் பெயரில் அருணலு கணக்கு ஒன்று ஆரம்பித்து இருக்காவிடில் தாமதிக்காமல் அருகே உள்ள கொமர்ஷல் வங்கிக்கு விரையுங்கள்.
- அர்ப்பணிப்புடன் கற்று அதிகம் வெல்லுங்கள். அருணலு பாதையில் உங்கள் குழந்தையையும் வழிநடத்துங்கள்.

சிறுவர் சேமிப்புக் கணக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கொழும்பில் 'சார்க்' திருவிழா

நூற்று நாற்பத்தாறு கோடி மக்கள் வசிக்கும் தென்னாசிய வட்டகையைச் சேர்ந்த எட்டு நாடுகளின் அரசுத் தலை ணவர்கள் பங்குபற்றும் 'சார்க்' உச்சி மாநாடு கொழும்பில் பலத்த ஆரவார எடுப்புகளோடும் பலத்த கெடுபிடிகளோடும் நடைபெற்று வருகின்றது.

இனித்தான் உச்சி மாநாட்டின் உச்சக்கட்டமாக வெளிவிவகார அமைச்சர்கள் சந்திப்பும் அதைத் தொடர்ந்து 'சார்க்' நாட்டுத் தலைவர்களின் ஒன்றுகூடலும் இடம்பெறப் போகின்றன.

பல நூறு கோடி ரூபா நிதியை அள்ளிக் கொட்டி, தடல்புடல் ஏற்பாடுகளைச் செய்து, பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெப்போதுமில்லாதவாறு இறுக்கிப் பிடித்து கொழும்பு செய்யும் இந்த ஒரு வாரக் கூத்தினால் நாட்டுக்கும் இந்தப் பிராந்திய மக்களுக்கும் நன்மை ஏதும் விளையுமா என்பதே பலரினதும் மனங்களைக் குடையும் கேள்வியாகும்.

இலங்கை அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு சார்க் பிராந்தியத் தலைமைப் பதவியை வழங்கி, அவரைக் கௌரவித்து ஆர்ப்பாட்டம் பண்ணும் ஓர் எடுப்பு நிகழ்ச்சியாகவும் இப்பிராந்தியத் தலைவர்கள் ஒன்று கூடி, படப்பிடிப்புக் கமராக்களுக்கு 'போஸ்' கொடுத்து, வெறுமனே கூடிக் கலையும் கேளிக்கை நிகழ்வாகவும் இது அரங்கேறி முடியுமா அல்லது பயன்தரு முடிவுகளை எட்டவும், அவை வழி செயற்படுவதற்கான தூண்டுதலைத் தரவும் வாய்ப்பளிக்கும் ஓர் அம்சமாக இது நடந்தேறுமா என்பதே இன்றைய வினாவாகும்.

மிக முக்கியமான காலகட்டத்தில் - சர்வதேச ரீதியில் பல்வேறுபட்ட பிரச்சினைகளும் தீவிரமடைந்திருக்கும் ஓர் இக்கட்டான சமயத்தில் - இந்தப் பிராந்தியத் தலைவர்கள் ஒன்று கூடுகின்றார்கள்.

பயங்கரவாதத்தை நசுக்குதல், வறுமையை ஒழித்தல், புவி வெப்பமடைதலையும் மாசடைதலையும் தடுத்து, காலநிலை மாற்றங்களைச் சீர்படுத்துதல், உணவுப் பொருள் விலை அதிகரிப்பு மற்றும் எரிபொருள் விலையேற்றம் ஆகியவற்றால் எழுந்துள்ள பிரச்சினைகளுக்குக் கூட்டாக முகம் கொடுத்தல் போன்ற சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை இந்த 'சார்க்' மாநாடு ஆராயவிருப்பதாகக் கூறப்படுகின்றது.

'சார்க்' நாடுகளில் மிகப் பெரியது உபகண்டம் என்று வர்ணிக்கப்படும் இந்தியா. அந்தத் தேசத்தில் அண்மையில்தான் அடுத்தடுத்து பல குண்டு வெடிப்புகள். குஜராத் மாநிலத்தின் அஹமதாபாத்தும், பெங்களூரும் அதனால் அதிர்ந்து, பேரழிவுகளைச் சந்தித்து நிற்கின்றன. எல்லை கடந்த பயங்கரவாதமே இக் கொடூரங்களுக்குப் பின்னணி என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.

போதாக்குறைக்கு காபூலில் இந்தியத் தூதரகத்திற்கு முன்னால் அண்மையில் இடம்பெற்ற மிக மோசமான - மிகக் கொடூரமான - வெடிகுண்டுத் தாக்குதலுக்கு அப்பிராந்திய நாடு ஒன்றின் உளவு அமைப்பே காரணம் என்று அதிகாரபூர்வ வட்டாரங்களில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், இந்திய - பாகிஸ்தான் எல்லையில் காஷ்மீர் பகுதியில் இரு நாட்டு இராணுவங்களும் மோதிக் கொண்டதில் இரு தரப்பிலும் சில ஜவான்கள் பலியாகியிருக்கின்றனர்.

இப்படி மோதலும் முறுகலும் முற்றியிருக்கும் சமயத்தில் சம்பந்தப்பட்ட நாடுகளின் உயர் தலைவர்கள் 'பிராந்திய ஒத்துழைப்பும் நட்புறவும்' என்ற பெயரில் கைகொடுத்து, பரஸ்பரம் குசலம் விசாரித்து, புகைப் படங்களுக்குப் 'போஸ்' கொடுப்பதில் அர்த்தமில்லை. அப்படிச் செய்வது வெறும் சம்பிரதாயபூர்வ கோமாளித்தனமாகவே இருக்கமுடியும்.

நாடுகளுக்கு இடையில் நிலவும் பிரசசினைகள் பற்றியோ, அங்கத்துவ நாடு ஒன்றின் உள்நாட்டுப் பிரச்சினைகள், பூசல்கள் பற்றியோ அரசுத் தலைவர்கள் கூடும் 'சார்க்' மாநாட்டில் குரல் எழுப்பவோ, கருத்துக்களை வெளியிடவோ முடியாது என்பது உண்மைதான்.

ஆனாலும் இந்தப் பிராந்தியத்தை ஆட்டிப்படைத்து வரும் பிரதான பிரச்சினைகள் எல்லாம் மேற்படி இரண்டு வகைக்குள் அடங்கி விடுவனவாக இருக்கும்போது அவை குறித்துப் பேசாமல் இந்த 'சார்க்' கூடிக் கலைவதில் என்ன பயன்? இந்தப் பிராந்திய மாநாட்டை இவ்வளவு செலவு, சிரமம், கஷ்டம் சகித்து முன்னெடுப்பதில் என்ன அர்த்தம்தான் இருக்க முடியும்?

இந்த மாநாடு நடைபெறும் இலங்கைத் தீவே இன்று அதன் தேசிய இனப்பிரச்சினையில் இரத்தக்களரியாகி, வன்முறைப்புயல் வீசும் பூமியாகியிருக்கின்றது.

தலைநகர் கொழும்பில் ப்ல்லாயிரக்கணக்கான படையினரைக் குவித்து, பாதுகாப்புகளை இறுக்கிக் கொண் டு, 'சார்க்' மாநாட்டுப் பிரதிநிதிகள் பயணம் செய்யும் பாதைகளை மட்டும் செப்பனிட்டு, அழகுபடுத்தி, 'ஆலாபரணம்' பண்ணி அமைதிப்படம் போடுகிறது கொழும்பு.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு 'பயங்கரவாத' முலாம் பூசி, அரச பயங்கரவாதத்தை மறைக்கவும் அது எத்தனிக்கின்றது.

இப்ப்பிரச்சினையில் பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர்களின் பக்க நியாயக் கருத்தை வெளிப்படுத்த இடமளிக்காமல், தமிழர்களின் நீதியான போராட்டத்தைப் பயங்கரவாதப் படம் காட்டி, சர்வதேச சமூகத்தை அதற்கு எதிராகத் திருப்பும் எத்தனத்துக்கு கொழும்பு இந்த மாநாட்டையும் பயன்படுத்தும் என்பது நிச்சயம். 'சார்க்' பிராந்திய நாடுகளில் பயங்கரவாதத்தை நசுக்குதல் என்ற தலைப்பில் இந்த நாடகத்தை அது அரங்கேற்ற முயற்சிப்பதும் வெளிப்படை.

# தமிழர் என்றால் புலிகள் என்ற குற்றச்சாட்டால் தமிழ் ஊடகவியலாளர்களுக்குப் பிரச்சினைகள்

## கண்டி மல்வத்த தேரரிடம் ஊடக அமைப்புகள் சுட்டிக்காட்டு

கொழும்பு,ஜூலை30

தமிழர் என்றால் புலிகள் என்ற குற்றத்தை முதலிலேயே சுமத்தி வருகிறார்கள். இதனால் தமிழ் ஊடகவியாளர்களையும் விடுதலைப் புலிகள் என்று சாயம் பூசுகிறார்கள். அதன் விளைவாக தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எழும் பிரச்சினைகள் ஏராளம். பெரும் பாதிப்பையும் ஆபத்தையும் தருவன வாகவும் உள்ளன.

ஊடக அமைப்புகளின் பிரதிநிதிகள் கண்டி மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரிடம் இவ்வாறு கூறினார்.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், முஸ்லிம் மீடியா போரம், ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம் ஆகிய 5 ஊடக அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து நேற்றுமுன்தினம் கண்டி மல்வத்த பீடத்தின் மகாநாயக்கரைச் சந்தித்து இலங்கை ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கி வரும் பல்வேறு நெருக்கடிகள் தொடர்பாக விளக்கினர்.

தேரரின் வாசஸ்தலத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் ஊடக அமைப்புகளின் பிரதிநிதிகள் மகாநாயக்கரிடம் மேலும் தெரிவித்ததாவது:

''தொழில் ரீதியாக இன்று ஊடகத்துறையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளவர்களுக்கு நாட்டில் கொலை அச்சுறுத்தல்கள் உட்பட வேண்டாத பல கொடூரங்கள் இழைக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய தொல்லைகள் குறித்து நாம் வீதியில் இறங்கி எமது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றபோதிலும் அதற்கும் நியாயம் கிடைப்பதில்லை. இத்தகைய சங்கடங்கள் குறித்து உங்களிடம் முறையிட வந்தோம். நீங்களாவது இதில் தலையிட்டு ஜனநாயகத்தின் அடிப்படைச் சுதந்திரத்தின் ஒரு பகுதியான எழுத்துச் சுதந்திரத்தைக் காப்பாற்ற உதவவேண்டும்.''

கடந்த காலங்களில் ஊடகவியலாளர்களை எதிர்நோக்கிய வேண்டப்படாத சம்பவங்கள் குறித்து நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். முன்னொரு போதும் இல்லாத வகையில் ஊடகவியலாளர்களுக்குத் தொல்லைகள் பல இழைக்கப்பட்டு வருகின்றன. பலர் கொல்லப்பட்டு விட்டார்கள். கடத்தப்படுகிறார்கள். கடந்த சனிக்கிழமை வெள்ளவத்தையில் ஒரு தமிழ் ஊடகவியலாளர் கடத்தப்பட்டிருக்கிறார்.

ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் தொல்லைகள் குறித்துப் பொலிஸாரின் நடவடிக்கையில் தாமதமே ஏற்படுகின்றது. சாதாரண கொலைச்சம்பவம் ஒன்று இடம்பெற்றால் அதன் சூத்திரதாரியைப் பொலிஸார் ஓரிரு கிழமைக்குள் கண்டறிந்து விடுகிறார்கள். ஆனால் ஊடகவியலாளர் தொடர்பான சம்பவங்களிலேயே இந்தத் தாமதம் நீடிக்கப்படுகின்றது.

ஊடகவியலாளர்கள் சில சந்தர்ப்பங்களில் தவறிழைப்பது உண்மையாயினும் பரவலாக அப்படி எதுவும் இடம் பெறுவதில்லை. எமக்குச் சில பொறுப்புகள் உண்டு. அதைத்தான் புரிந்து கொள்ள பலர் பின்னிற்கின்றனர்.

பொருத்தமில்லாதவர்கள் அரச ஊடகங்களுக்கு நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டமையால்தான் இத்தகைய சோதனைகள் எமக்கு. ரூபவாஹினி சம்பவங்கள் தொடர்பாக இற்றைவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

செய்திகளை வெளியிடும் நிறுவனங்களின் ஆசிரியர்களுக்கு இன்று பெரும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. இன்றைய சூழ்நிலையில் ஊடகவியலாளர்கள் தமது தொழில் துறையில் நிம்மதியைக் காண முடிவதில்லை. இவற்றை நீங்களாவது முன்வந்து களைய உதவ வேண்டும் - என உருக்கமாக மகாநாயக்கரிடம் வேண்டுகோள் விடுத்தனர். (சி)

# வில்லூன்றியில் வெள்ளியன்று ஆடி அமாவாசை தீர்த்தம்

யாழ்ப்பாணம்,ஜூலை30

வில்லூன்றி புனித தீர்த்தத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆடி அமாவாசை தீர்த்தத் திருவிழாவும் தர்ப்பணாதி அனுட்டானங்களும் இடம்பெறவுள்ளன.

அன்று காலை 6.30 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையும், 7 மணிக்கு விசேட பூசையும், 7.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் இடம்பெறும்.

8 மணியளவில் சுவாமி எழுந்தருளி கோபுரவாயிலில் தரிசனம் இடம்பெற்று 8.30 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெறும்.

முற்பகல் 10.30 மணியளவில் சுவாமி கோயிலுக்கு எழுந்தருளுவார்.

விநாயகர் பெருமான் 8.30 மணிக்கு தீர்த்தமாடிய பின்னர் பிதிர்க்கடன் செய்வோர் அமாவாசை தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தம் ஆடவும் பிதிர்த்தர்ப்பணங்கள் செய்துகொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

# "சார்க்" அமைப்பின் தலைவர் பதவியைப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறாதீர்கள்

## ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் ஆனந்தசங்கரி

கொழும்பு,ஜூலை30

'சார்க்' நாடுகளின் தலைவர் பதவி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்படவிருக்கின்றமை குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார்.

ஆனந்தசங்கரி ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இன்னும் சில நாள்களில் இன்னுமொரு பெரும் பதவி தங்களை அலங்கரிக்க இருக்கிறது. 1.7 பில்லியன் மக்களை உள்ளடக்கிய மிகப்பெரிய அமைப்பாகிய சார்க் நாடுகளின் தலைவராக நியமிக்கப்படவுள்ளீர்கள். தங்களின் இச்சாதனைக்கு முன்கூட்டியே எனது வாழ்த்துக்கள்.

இப் பெரும் கௌரவம் தங்கள் மீது சுமத்தப்பட்டதையிட்டு நாடு பெருமிதம் கொள்கிறது. குறைந்த வயதில் (வயது -24) நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு 38 ஆண்டுகள் நாட்டுக்கு சேவை செய்த ஒரு பெருமகனாருக்கு வழங்கப்பட்ட பொருத்தமான கௌரவமாகும்.

நிரந்தர பயத்துடனும், பீதியுடனும் வாழும் எம் மக்களுக்கு சார்க் உச்சி மாநாட்டை நடத்துவதற்குக் கிடைத்த வாய்ப்புக் கடவுளால் தரப்பட்ட வரப்பிரசாதமும், ஆசீர்வாதமும் ஆகும்.

அங்கத்துவ நாடுகள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே சார்க் உச்சி மாநாட்டு வேலைத்திட்டத்தில் ஒன்றாகும். அதிர்ஷ்டவசமாக எமது ஏழு அயல் நாடுகளுடன் எமக்கு எவ்வித கருத்து வேறுபாடும் கிடையாது.

ஜனாதிபதியாகக் கடமையாற்றும் தாங்கள் அங்கத்துவ நாடுகளுடன் நல்லுறவு கொண்டிருப்பது எமது மேலதிக அதிர்ஷ்டமாகும். எமது நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகள் அத்தனையையும் தீர்ப்பதற்கு உதவ அங்கத்துவ நாடுகள் மகிழ்வுடன் செயற்படத் தயாராகவுள்ளன. மக்களின் நலன் பேணல், அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல், பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல், கௌரவமாக வாழ வாய்ப்பளித்தல் ஆகியவை சார்க் உச்சி மாநாட்டின் பல நோக்கங்களில் சிலவாகும்.

தற்போது தொடர்ந்து யுத்தம் நடைபெறும் வேளையில் விடுதலைப் புலிகள் இடப்பெயரும் மக்களை அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் செல்ல விடாது தடுப்பதால் அவர்கள் அனைவரும் கிளிநொச்சியை நோக்கி நகர்கின்றனர்.

இது மக்களுக்கு மேலும்மேலும் பல கஷ்டத்தைக் கொடுப்பதோடு மக்களுக்கு பட்டினி நிலைமையை ஏற்படுத்தும். இந்த நாட்டு ஜனாதிபதி என்ற கோதாவில் மக்கள் அனைவரையும் சமமாக நடத்த வேண்டிய கடமை தங்களுக்கு இருப்பதோடு துன்புறும் மக்களின் துயர் துடைக்க வேண்டிய கடமைப்பாடும் உண்டு.

தங்களைத் தவிர இது சம்பந்தமாக வேறு எவரிலும் பார்க்க கூடிய அக்கறை கொள்ள வேண்டியவன் நானே. ஏனெனில் 1970ஆம் ஆண்டு கிளிநொச்சியையும், 2000ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தையும் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தியவன். கிளிநொச்சித் தொகுதியின் ஒரு பகுதியாக முல்லைத்தீவின் ஒரு பகுதியை நான் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளேன்.

இத் தாங்கொணாத் துயரை மக்களால் மேலும் பொறுத்துக்கொள்ள முடியாது. மேலும் தாமதிக்காது ஒரு தீர்வு உடனடியாகக் காணப்பட வேண்டும். சார்க் உச்சி மாநாடு என்ற ஒரு பொன்னான வாய்ப்பினைத் தவறவிடாமல் பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஏனெனில் பல ஆண்டுகளுக்கு மேலாக இத்தகைய வாய்ப்பு எமக்கு கிட்டாது.

நீங்கள் நல்ல உறவு கொண்டுள்ள ஏழு நாடுகளின் தலைவர்களின் உதவியை நாடினால் தங்களை யாரும் குறை கூற முடியாது. இம் மாநாட்டில் கலந்துகொள்ளும் இந்தியக் குழுவினர் எமது பிரச்சினைகள் பற்றி நன்கு அறிந்தவர்கள். நீண்டகாலமாக இனப்பிரச்சினையில் ஈடுபாடு கொண்டிருந்தமையால் இந்தியா பிரதான பங்காற்றுவதை சகல நாட்டுத் தலைவர்களும் நிச்சயமாக வரவேற்பர். (சி)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 16 | 31.07.2008 |
| | வியாழக்கிழமை |
| திதி: | சதுர்த்தசி |
| | மு.இ. 06.44 வரை |
| நட்சத்திரம் : | புனர்பூசம் |
| | மு.இ. 08.24 வரை |
| சுபநேரம் : | 07.33 - 09.03 |
| ராகுகாலம் : | 01.33 - 03.03 |

உங்கள் உதிரம் பிறர் உயிர் காக்கும்

* சடுதியான பெருமளவான குருதிப் பெருக்கினால் உயிர் பிரிவதை உடனடியாக இரத்தம் ஏற்றினால் தடுக்கலாம்.
* குருதி உறையா நோய், குருதிச்சோகை, டெங்கு காய்ச்சல் போன்றவற்றுக்குக் குருதியைப் பல கூறுகளாகப் பிரித்து ஏற்றி பலரின் வாழ்வை நீடிக்கலாம், வளமாக்கலாம்.
* வலிமைமிக்க புற்றுநோய் (கான்சர்) சிகிச்சைகளுக்கு புற்றுநோயாளரின் உடல் தாக்குப்பிடிப்பதற்கு அடிக்கடி இரத்தக் கூறுகளை ஏற்றி வாழ்க்கைக் காலத்தை நீடிக்கலாம்.
* பிறந்த குழந்தைக்கு ஏற்படும் மஞ்சள் காமாலை நிலையின் பாதிப்பிலிருந்து பாதுகாக்க உடல் இரத்தத்தை முழுமையாக அகற்றி புதிய இரத்தம் ஏற்றப்படலாம்.

இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

021 222 3063

குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா-02.08.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி. உறுப்பினரின் கடைக்குள் புகுந்து அமைச்சர் மேர்வின் சில்வா தாக்குதல்!

## - கைத்துப்பாக்கியால் சுட்டு அட்டூழியம் -

கொழும்பு, ஜூலை 30

பொலநறுவை அரலன்கன்வில பகுதியில் உள்ள ஜே.வி.பி. கட்சியின் உறுப்பினர் ஒருவரது கடைக்குள் புகுந்த அமைச்சர் மேர்வின் சில்வாவும் அவரது சகாக்களும் அங்கிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தி காட்டுத் தர்பார் புரிந்திருக்கின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு குறித்த பகுதிக்கு மூன்று வாகனங்களில் தமது பரிவாரங்களுடன் சென்ற மேர்வின் சில்வா, அங்கிருந்த ஜே.வி.பி. உறுப்பினர்கள் சிலரைக் கடுமையாகத் தாக்கியதுடன் தனது கைத்துப்பாக்கியால் கடையில் இருந்த பொருள்களுக்குச் சுட்டுச் சேதம் விளைவித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடை உரிமையாளரான கீத்சிறி கயன் அமைச்சர் தம்மை நையப்புடைத்ததோடு, எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென மிரட்டினார் என்றும் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அரலன்கன்வில ருவரகலவில் உள்ள குறிப்பிட்ட கடையில் ஜே.வி.பியின் ஆதரவாளர்கள் கூடியிருந்த வேளையே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

''மேர்வின் சில்வாவும் அவரது ஆதரவாளர்களும் மூன்று வாகனங்களில் வந்தனர். தமது வாகனங்களின் மின் விளக்குகளை அணைத்த பின்னர் தாக்குதலை மேற்கொண்டனர். ஜே.வி.பிக்கு ஆதரவு வழங்கினால் கொலைசெய்யப்படுவீர்கள் என அச்சுறுத்தினர்'' - என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (சி)

## பிள்ளை நேயப் பாடசாலை தொடர்பான பயிற்சிப் பட்டறை

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் பிள்ளை நேயப் பாடசாலை தொடர்பான பயிற்சிப் பட்டறை யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் நிலையத்தில் எதிர்வரும் 4ஆம், 5ஆம், 6ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் யாழ்.மாவட்டத்திலுள்ள 5 கல்வி வலயங்களிலிருந்தும், கோட்டக்கல்விப் பணிப்பாளர், ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், சேவைக் கால ஆலோசகர்கள், தெரிவுசெய்யப்பட்ட சிரேஷ்ட ஆசிரியர்கள் ஆகியோரைக் கொண்ட எட்டுப்பேர் வீதம் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (202-236)




### மகளிருக்கான 3 நாள் அழகுக்கலை பயிலமர்வு

அடிப்படை முக அழகுக்கலை (**Basic Facial**) இந்து கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம், மடிசார் குஜராத்தி, கூர்க்காஸ், சிங்கப்பூர் முறைகளிலான சேலை அணிவிக்கும் முறைகள் என்பன எதிர்வரும் 1ம், 2ம், 3ம் நாட்களில் (வெள்ளி, சனி, ஞாயிறு, காலை 9.00 மணிமுதல் பி.ப. 2.00 மணிவரை போதிய விளக்கங்களுடனும் குறிப்புகளுடனும் இடம்பெறவுள்ளன வகுப்புகளில் பங்குபற்றியமைக்கான சான்றிதழும் வழங்கப்படும். பயிற்சிக்கட்டணம் மற்றும் மேலதிக விவரங்களை இன்றிலிருந்து எதிர்வரும் வியாழன் பி.ப 2 மணி வரை நேரில் அறிந்துகொள்ளலாம்.

**கலாலயா** பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.


### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19 . 08 . 1923

மறைவு 10 . 08 . 2007

**திருமதி இளையதம்பி பொன்னம்மா**

திதி: திரயோதசி (30.07.2008)

அன்பின் சிகரமே அம்மா!
ஆறவில்லை என் நெஞ்சில்
உன் பிரிவம்மா!
உன்னைப் பிரிந்து ஓராண்டாகியும்
உன் நினைவு என் நெஞ்சில்
உறங்கி வாழுதம்மா!
மீண்டும் நீ வாராயோ?
என நிதம் ஏங்கித் தவிக்கின்றேன்.

வடலித்தோட்டம்,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
திருமதி ரஞ்சலாதேவி
(மகள்).

(76769)

### கூட்டம்

கோப்பாய் பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வைத்தியசாலை பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

### செயலமர்வுகள்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலம் பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் எதிர்வரும் 6ஆம், 7ஆம் திகதிகளில் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெற உள்ளன.

அனைத்து வகுப்புகளிலும் சகல பாடங்களிலும் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கும் ஆசிரியர்களை செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் குபிரேமகாந்தன் கேட்டுள்ளார். (202-207)




இப்போது விற்பனையில் சுடர் ஒளியில் சுடச்சுட வாசியுங்கள்!

- பாலமீன் மடுவில் ஒரு செம்மணி
- புதுடில்லியுடன் பொருதத் தயாராகிறது கூட்டமைப்பு
- இலங்கை அரசின் இரட்டை முகங்கள்
- 'செல்போன்'களுக்கு இனி பிரேத பரிசோதனை!
- மனிதனுக்குள் ஒரு மிருகம் - பாம்புகள் மல்யுத்தம் (தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் மதன் எழுதுகிறார்)
- கொமாண்டோ தாக்குதல்களில் இராணுவம் வெற்றி பெறுமா?

ஜனாதிபதிக்குப் பிடித்த சுடர் ஒளி

விமானக் கட்டண விலை ரூ: 35/

- ஏழு நாள்களுக்குள் ஏழரை லட்சம் தமிழர் இலங்கையில் அதிகரித்தனரா?

-கல்கி எழுதிய விளக்கத்தைப் படியுங்கள்

மற்றும் வழமையான பல்சுவை அம்சங்கள் வெளிவந்துள்ளன

உங்கள் உதயன் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்.

இப்போது விற்பனையில்


### ஈர விழிகளுடன் உள்ளங்களின் நினைவலைகள்

**19ஆம் நாள் நினைவலைகள்**

மலர்வு 08.04.1929



உதிர்வு 12.07.2008

**அமரர் சிவக்கொழுந்து மாசிலாமணி**

அன்பு செய்தீர்! அரவணைத்தீர்!
இன்பமாய் நாம் வாழ நீர் உழைத்தீர்!
கல்வி தந்தீர்! செல்வம் தந்தீர்!
கடின உழைப்பிற்கு வழி சொன்னீர்!
நாள்கள் பத்தொன்பதுதான் சென்றது
மறக்குமா உங்கள் முகம்.

**19ஆம் ஆண்டு நினைவலைகள்**



மலர்வு 26.07.1936

உதிர்வு 30.07.1989

**திருமதி பாக்கியமலர் மாசிலாமணி**

அன்பின் அணிகலனாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
அமைதியின் உறைவிடமாய்
ஆண்டுகள் பத்தொன்பது ஆனாலும்
என்றும் உன் திருமுகத்தை
எம் நினைவு மறக்காது.

சென்ற உங்கள் ஆன்மா என்றும் சீர்பெறவே இறைஞ்சிடுவோம்.

மாசிலாமணி ஆபரணமாளிகை,
96/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


**இறைச்சிக்கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

(76612)

**எம்புறோடிங் ரை**



நீண்டகால பாவனைக்கு உத்தரவாதம்

பாடசாலை மாணவர்களுக்குரிய ரை

69.00 லிருந்து

எஸ் . எஸ். யசோதரன் ஆட்ஸ்
212,கோவில் வீதி, நல்லூர்

புதிய இணைப்பிற்கும் கட்டணங்கள் செலுத்துவதற்கும்

**SATS - TECH**

(TRCSL அனுமதிபெற்ற நிறுவனம்)
Dial : 021 222 5908,
222 8812, 0777 710785

**சோதிடம்**

ஜாதகக் குறிப்பு, கைரேகை, எண் விஞ்ஞானம் ஆகியவற்றின் மூலமாக உங்கள் எதிர்கால பலன்களை அறிய விரும்புகிறீர்களா? இன்றே நாடுங்கள்! நற்பயனடையுங்கள்!!

கல்வி, தொழில், திருமணம் பற்றிய உங்கள் கேள்விகளுக்கு உரிய பதில் உடனே தரப்படும்.

டாக்டர் த.சிவானந்தன்,
பிரபல சோதிடர்,
5, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(76697)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கடற்படையை எச்சரிக்க வேண்டும் மன்மோகனைச் சந்தித்து ராமதாஸ் கோரிக்கை

சென்னை, ஜூலை 30

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த கச்சதீவை மீட்க வேண்டும் அல்லது அந்தப் பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கும் உரிமை, வலைகள் காயப்போடும் உரிமை, தேவாலயத்தில் வழிபடும் உரிமை என்பவற்றை மீட்கவேண்டும். தமிழக மீனவர்கள் சுட்டுக்கொல்லப்படுவார்களெனின் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கைக் கடற்படையை இந்திய அரசு கடுமையாக எச்சரிக்க வேண்டும்.

- இவ்வாறு பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ், டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், சார்க் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள இலங்கைசெல்லும் பிரதமர், தமிழக மீனவர்களின் கவலைகளை இலங்கை அரசிடம் கண்டிப்பாக எடுத்துச் சொல்லி, சட்டத்துக்கு புறம்பான இந்தச் செயல்களைத் தடுத்து நிறுத்த நிலையான நடவடிக்கைகளை எடுக் குமாறு இலங்கை அரசை இணங்க வைக்க வேண்டும் என்றும் கூறினார்.

டில்லியில் நேற்றுமுன்தினம் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசிய ராமதாஸ், நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றதற்காக பிரதமருக்கு பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

பிரதமரின் இல்லத்தில் நடைபெற்ற அந்தச் சந்திப்பின்போது டாக்டர் ராமதாஸுடன் புதுவை மக்களவை தொகுதி பா.மா.க. உறுப்பினர் மு. ராமதாஸும் உடன் சென்றிருந்தார்.

''நம்பிக்கை வாக்கெடுப்பில் பெற்றிருக்கும் வெற்றி, நாட்டு நலன் கருதி இந்திய - அமெரிக்க அணு ஆற்றல் உடன்பாட்டைச் செயல்படுத்த வேண்டும் என்பதில் நீங்கள் காட்டிய நெறி தவறாமைக்கும், நேர்மைக்கும், உறுதிப்பாட்டுக்கும் கிடைத்த வெற்றி என்று பிரதமர் மன்மோகன் சிங்கிடம் டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார்.

மேலும் சில கோரிக்கைகளை வலியுறுத்தி பிரதமரிடம் கடிதம் ஒன்றைக் கையளித்தார்.

## இந்திய அணி 6ஆம் திகதி அறிவிப்பு

மும்பை, ஜூலை 30

இலங்கை அணியுடனான ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணி, எதிர்வரும் 6ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் தற்போது விளையாடி வருகிறது. டெஸ்ட் தொடருக்குப் பின் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது. இத்தொடருக்கான இந்திய அணி காலியில் நடக்கவுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டிக்குப் பின், ஓகஸ்ட் 6ஆம் திகதி மும்பையில் அறிவிக்கப்படவுள்ளது.

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்களில் 53 பேர் பலி; 240 பேர் வரை படுகாயம்

பக்தாத், ஜூலை 30

ஈராக்கில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இரு இடங்களில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 53 பேர் கொல்லப்பட்டனர். 240 பேர்வரை காயமடைந்தனர். தலைநகரான பக்தாத்திலும், வட நகரான கிர்குக்கிலும், இத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

கஸ்மியா ஷியா புனித ஸ்தலத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஷியா முஸ்லிம் யாத்திரிகர்கள் மத்தியில், மூன்று தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றில் 28 பேர் கொல்லப்பட்டனர். 90 பேர்வரை காயமடைந்தனர். பெண் தற்கொலைக் குண்டுதாரிகளே, இத் தாக்குதல்களை நட்த்தியுள்ளார்கள் என்றும் அவ் வட்டாரம் விவரித்தது.

வடநகரான கிர்குக்கில், குர்திஷ் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அச்சமயம் கூட்டத்தினர் மத்தியில், தற்கொலைக் குண்டுத் தாக்குதலொன்று நடத்தப்பட்டது. இதில் 25 பேர் கொல்லப்பட்டனர். குறைந்த பட்சம் 150 பேர் காயமடைந்தனர். படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் 30 பேர் ஆபத்தான கட்டத்திலிருந்தனர் என, அதிகாரிகளும், மருத்துவமனை அதிகாரிகளும் குறிப்பிட்டார்கள்.

# பாகிஸ்தான் தீவிரவாதப் போராளிகளுக்கு எதிராக தன்னிச்சையாக நடவடிக்கை எடுக்க வேண்டாம் என அமெரிக்காவுக்கு எச்சரிக்கை

வொஷிங்டன், ஜூலை 30

பாகிஸ்தானிலுள்ள இஸ்லாமிய தீவிரவாதப் போராளிகளுக்கு எதிராக, தன்னிச்சையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாமென, அமெரிக்காவுக்கு பாக். பிரதமர் கிலானி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஜா கிலானி, வொஷிங்டனில், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷுடன் திங்கட்கிழமை பேச்சுகள் நடத்தினார். அதன் பின்னர் அளித்த பேட்டியொன்றிலேயே மேற்படி எச்சரிக்கையை கிலானி விடுத்தார்.

இச் சந்திப்புக்குப் பின்னர், பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஜா கிலானி பத்திரிகையாளர் மாநாடொன்றில், தீவிர வாதிகளுக்கு எதிரான போரில், பாகிஸ் தான் தன்னை முழுவீச்சில் ஈடுப டுத்திக் கொண்டுள்ளது என்றார்.

ஆப்கானுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலுள்ள எல்லைப் பிராந்தியத்தில், தலிபான் தீவிரவாதிகளும், அல் - குவைதா தீவிரவாதிகளும் ஊடுருவியுள்ளார்கள். பாகிஸ்தான் பழங்குடிகள் வாழும் பிராந்தியங்களில் அவர்கள் உள்ளூர் தீவிரவாதிகளின் ஆதரவைப் பெற்றுள்ளார்கள். அத்துடன் இவர்கள் இரு நாடுகளுக்குள்ளும் தாக்குதல்கள் நடத்தி வருகின்றார்கள் என, இச்சந்திப்பில், அமெரிக்கத் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது என இராஜதந்திர வட்டாரம் குறிப்பிட்டது.

பாகிஸ்தான் எல்லைப் பிராந்தியங்களுக்குள் ஊடுருவியுள்ள தீவிரவாதிகளில் எகிப்து, சிரியா, சவூதி ஆகிய நாடுகள் உட்பட பல நாடுகளைச் சேர்ந்த இஸ்லாமிய தீவிரவாதிகளும் அடங்குவர். பிராந்திய அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் அவர்களை பாகிஸ்தான் வெளியேற்ற வேண்டும். இல்லையேல் அமெரிக்காவின் நேரடி தலையீடு இடம் பெற்றுவிடும் என ஏற்கனவே அமெரிக்காவும் எச்சரிக்கை விடுத்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொலைத்தொடர்புக் கருவிகள் படகுடன் பறிமுதல்

கீழக்கரை, ஜூலை 30

விடுதலைப் புலிகளுக்குக் கடத்தப்படவிருந்த நவீன செயற்கைக்கோள் தொலைத் தொடர்பு சாதனம் உள்ளிட்ட பொருள்களுடன் கீழக்கரை அருகே நின்ற நாட்டுப் படகை பொலிஸார் பறிமுதல் செய்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கீழக்கரை அருகே சின்ன ஏர்வாடி கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் கேட்பாரற்ற நிலையில் நாட்டுப் படகு ஒன்று நின்றது.

படகை பொலிஸார் சோதனையிட்டபோது சுவிட்ஸர்லாந்து நாட்டில் தயாரிக்கப்பட்ட மூன்று நவீன செயற்கைக்கோள் தொலைத் தொடர்பு சாதனக் கருவி, இரண்டாயிரத்து 162 கேம்லின் பண்டார்ச் லைட், 230 யமஹா ஸ்பார்க் பிளக், இரண்டு யமஹா ஒயில்படகு எஞ்ஜின், மூன்று யமஹா வயர் சுற்று, லெனின் பட சிடி 30, புதிய மீன் பிடி வலை ஆகியவை இருந்தன.

ராமநாதபுரம் எஸ்.பி.செந்தில்வேலன் படகைச் சோதனையிட்டு விசாரணை நடத்தி வருகிறார். விடுதலைப்புலிகள் தமிழகத்துக்குள் ஊடுருவிப் பொருள்களை வாங்கி வந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்கள்

### மாதவர் ஜெயபாலா



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட மாதவர் ஜெயபாலா(பொறியியலாளர்) 28.07.2008 திங்கட்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாதவர்-இராஜமலர் தம்பதியரின் (சிங்கப்பூர்) அன்பு மகனும், காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் ராஜேஸ்வரி தம்பதியரின்(ஆஸ்திரேலியா) அன்பு மருமகனும், சிவனேஸ்வரி(பவானி-ஆஸ்திரேலியா) யின் அன்புக் கணவரும், தேவமலர்(சிங்கப்பூர்), அம்பிகா (சிங்கப்பூர்), புகழ்மலர் (சிங்கப்பூர்), பிரபாகரன(சிங்கப்பூர்), விஜயரத்தினம்(சிங்கப்பூர்), பத்மினி(சிங்கப்பூர்), மனோகரா (சிங்கப்பூர்), இராஜேந்திரா (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மாலதி (உரும்பிராய்), ராஜபுஸ்பம் (சித்தங்கேணி), மோகனராஜா (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), கோபாலராஜா (பொறியியலாளர், மத்திய கிழக்கு), ஆனந்தி(கனடா), வசந்தி (ஆஸ்திரேலியா), சத்தியராஜ்(வங்கியாளர், ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும், யோகராஜன்(அதிபர், கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி), செல்வராஜா(ஆசிரியர், யாழ்.இந்துக்கல்லூரி), ராஜ்குமார்(ஆஸ்திரேலியா), பரம்சோதிநாதன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகலனும், பவித்திரா (ஆஸ்திரேலியா), கார்த்திகாயினி(மத்திய கிழக்கு), ரோகினி(ஆஸ்திரேலியா) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், மதினி(டாக்டர், ஆஸ்திரேலியா), ரஜினி(டாக்டர், ஆஸ்திரேலியா), சாலினி(மாணவி, ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவின் சிட்னியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (30.07.2008) புதன் கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2மணியளவில் ஆஸ்திரேலியா சிட்னி றூக்வூட்(Rook Wood) பொதுமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பூம்புகார்,*
*சித்தங்கேணி.*

(76785)

தகவல்:
சி.செல்வராஜா
(சகலன்)

### கிட்டிணன் தவமணிதேவி

கரணவாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணன் தவமணிதேவி நேற்று (29.07.2008) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிட்டிணனின் அன்பு மனைவியும், வேதநாயகி, சேந்தன் (World Vison- யாழ்ப்பாணம்), சுதர்சினி (லண்டன்), சுகந்தினி(கொழும்பு), அஜந்தன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுசிலாதேவி, அமரர் சூரியகலா, சரஸ்வதி(கனடா) ஆகியோரின் பாசமிகு சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2008) புதன்கிழமை மு.ப 11மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூத்வுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்புமயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கரணவாய் கிழக்கு,*
*கரவெட்டி.*

(b)

தகவல்:
கி.சேந்தன்
(மகன்)

# குண்டுவெடிப்பை அடுத்து இந்தியா வர ஆஸி.கிரிக்கெட் அணி அச்சம் தெரிவிப்பு

மெல்போர்ன், ஜூலை 30

பெங்களூர், அஹமதாபாத் ஆகிய இடங்களில் நடந்த குண்டுவெடிப்புகளை அடுத்து ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள அச்சம் தெரிவித்துள்ளது. பாதுகாப்புக் குறித்து ஆராய அடுத்த மாதம் குழு ஒன்றை இந்தியா அனுப்பத் திட்டமிட்டுள்ளது.

சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் பாகிஸ்தானில் நடக்கிறது. இங்கு சமீப காலமாக பயங்கரவாதச் சம்பவங்கள் அதிகரித்து வருவதால் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் நியூஸிலாந்து அணிகளின் முன்னணி வீரர்கள் பங்கேற்கத் தயங்கி வருகின்றனர்.

இத்தொடருக்குப் பின் ஆஸ்திரேலிய அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு நான்கு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் ஒக்டோபர் 9ஆம் திகதி பெங்களூரில் தொடங்குகிறது.

இந்நிலையில் பெங்களூரில் கடந்த 25ஆம் திகதி ஏற்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவம் காரணமாக ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபை அச்சம் அடைந்துள்ளதாகத் தெரிகிறது. இதையடுத்து அடுத்த மாதம் 10ஆம் திகதி கிரிக்கெட் சபை நிர்வாகிகள் மற்றும் பாதுகாப்பு ஆலோசகரைக் கொண்ட கமிட்டி ஒன்று, பாதுகாப்புச் சூழ்நிலைகளை அறிந்து கொள்ள இந்தியா வருகிறது.

பெங்களூர் டெஸ்ட் குறித்து நேற்று முன்தினம் ஆஸ்திரேலியக கிரிக்கெட் சபையின் முகாமையாளர் பீட்டர் யங், ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபைத்தலைமை நிர்வாகி ஜேம்ஸ் சுதர்லாண்ட் உடன் ஆலோசனை நடத்தினார். இதற்கு பின் பீட்டர் யங் அளித்த பேட்டியில், ''ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபைக்கு தனி விதிமுறைகள் உள்ளன. இதன்படி ஒரு தொடருக்கு முன்பாக அந்நாட்டில் உள்ள பாதுகாப்புச் சூழ்நிலைகள் தொடர்பாக அறிந்து கொள்வது அவசியம்.'' - என்றார்.

இந்தியாவில் நடந்த ஐ.பி.எல்., தொடருக்கு முன்பாக நடந்த ஜெய்ப்பூர் குண்டுவெடிப்பு சம்பவத்தை, தற்போது பாகிஸ்தானில் நடந்துவரும் பயங்கரவாதச் செயல்களுடன் ஒப்பிட முடியாது என சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் சங்க தலைவர் டிம் மே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியத் தொடரில் விளையாடுவதில் எந்த சிக்கலும் இல்லை. இந்தியாவில் போட்டிகள் பாதுகாப்பாக நடக்கும் என ஆஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளர் பிரட் லீ தெரிவித்துள்ளார்.


## தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)
## 26 ஸ்ரீ 5296 லொறி விற்பனைக்கான கூறுவிலை கோரல்

*தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான 26ஸ்ரீ 5296 இலக்கமுடைய இசுசு லொறி விற்பனைக்குள்ளது. ஆகவே பெற விரும்புவோர்களிடம் இருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. கேள்விப் பத்திர விண்ணப்பத்தினை தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*பெறுபவர்கள் கேள்விப்பத்திர மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 500/= ஐயும் மீளளிக்கும் வைப்புப் பணமாக 2500/=ஐயும் செலுத்தி கேள்விப்பத்திர விண்ணப்பத்தினை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பத்தினை பெற்றவர்கள் 11.08.2008 ஆம் திகதி நண்பகல் 11 மணிக்கு முன்பு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பங்கள் தங்கள் முன்னிலையில் அன்றைய தினமே நண்பகல் 12 மணிக்கு திறக்கப்படும். விண்ணப்பத்தில் பெறத்தகுதி உடையவர்கள் வாகனத்தை இரண்டு நாள்களுக்குள் கொள்வனவு செய்யத்தவறும் பட்சத்தில் மீளளிக்கப்படும் வைப்புப் பணமாக செலுத்தும் ரூ 2500/= திரும்பி வழங்கப்பட மாட்டாது என்பதனை அறியத்தருகின்றேன்.*

கூட்டுறவுச் சேவையிலுள்ள
**நா.குமாரதேவன்.**
**பதில் முகாமையாளர்**

(சி/563981)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# மாவைக் கந்தன் தேர்த்திருவிழாவுக்கு நாளை சகல பகுதிகளில் இருந்தும் விசேட பஸ் சேவைகள்

## தனியார் சிற்றூர்திச் சேவைகளும் நடைபெறும்

வலி- வடக்கு, ஜூலை 30

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த காம்போற்சவத்தில் நாளை தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது.

தேர்த்திருவிழாவில் கலந்து கொள்ளச் செல்லும் பக்தர்களின் வசதி கருதி குடாநாட்டில் சகல பகுதிகளில் இருந்தும் விசேட பஸ் சேவைகளை போக்குவரத்துச் சபை யும் தனியார் சிற்றூர்திச் சங்கமும் நடத்த உள்ளன.

தெல்லிப்பழை சோதனை நிலையத்தில் இருந்தும் கூடுதலான பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

அன்று காலை விசேட அபிஷேகம், பூசைகள் இடம் பெற்று மு.ப 11மணிக்கு முருகப் பெருமான் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்காட்சி அளிப்பார்.

ஆலயத்தில் கூடும் பக்தர்களுக்கு குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

படையினரும் தேநீர் கடை ஒன்றை ஆலய வீதியில் நடத்திவருகின்றனர்.

ஆலயத்தின் தெற்கு் வீதியில் உள்ள அன்னதான மடத்தில் வழமைபோல் அன்னதானம் வழங்கப்படும். வடக்கு வீதியில் அமைந்துள்ள காங்கேசன் சிமெந்து தொழிற் சாலை ஊழியர்களின் அன்னதான மடத்தி லும் அன்னதானம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதே வேளை -

கீரிமலையில் நாளை மறுதினம் இடம்பெறும் ஆடி அமாவாசை தீர்த்த உற்சவத்தில் பங்கு கொள்ளவிருக்கும் பக்தர்களின் வசதியைக் கருத்தில் கொண்டு குடாநாட் டில் சகல பகுதிகளிலும் இருந்தும் தெல்லிப்பழைக்கும் சேந்தாங்குளத்துக்கும் விசேட பஸ் சேவைகள் நடத்தப்படவுள்ளன. (அ-1-86)

# சாவகச்சேரி இந்துவின் முன்னாள் அதிபர் வெற்றிவேல் காலமானார்



சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பூ.வெற்றிவேல் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமது 86 ஆவது வயதில் காலமானார். இக்கல்லூரியில் விஞ் ஞான ஆசிரியராகவும், உப அதிபராகவும் பணியாற்றிய பின்னர் இவர் அதிபராகப் பதவி உயர்ந்தவர். இக் கல் லூரியில் மொத்தம் பதினாறு வருடங்கள் சேவையாற்றியவர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கும் அது இன்றைய நிலையை எய்துவதற்கும் அவரது உழைப்பும் முயற்சியும் பெருங்காரணங்கள்.

1970 ஆம் ஆண்டு தொடக்கம் 1984 ஆம் ஆண்டு வரை அவர் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில், கல்லூரியின் பௌதிக வளவிருத்தி, மாணவர் ஒழுக்கநெறி பேணல், நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான கூடம் அமைப்பு ஆகிய பணிகள் கல்லூரியின் வளர்ச்சிக்கும் மாணவரின் கல்வி உயர்ச்சிக்கும் பெரிதும் உதவின.

இவர் அதிபராகப் பதவி வகித்த காலம் சாவகச்சேரி இந்துவின் பொற்காலம் எனக் கருதப்படக் கூடியது. விஞ்ஞானப் பட்டதாரியான இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சென்னைகிறிஸ்தவக்கல்லூரி ஆகியவற் றின் பழைய மாணவன்.

இவரது இறுதிச் சடங்குகள் இன்று புதன்கிழமை கொழும்பில் நடைபெறுகின் றன. (அ)

## வெள்ளி மாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையம் அறிவித்துள்ளது.

வான் பரப்பில் மேற்குப் பக்கத்தில் சூரியன் அரைவாசியாக தென்படும் என்றும் மாலை 6.29க்கு சூரிய அஸ்தமனம் வரை கிரகணத்தைப் பார்க்க முடியும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

26சதவீதப் பகுதி சந்திரனால் மூடப்பட்ட நிலையில் சூரிய கிரகணம் தென்படும்.

அதனை வெறும் கண்ணால் பார்க்கக் கூடாது என்றும் கறுப்புக் கண்ணாடி அணிந்தே பார்க்க வேண்டும் என்றும் ஆர்தர் சி கிளார்க் ஆராச்சி நிலையம் தெரிவித்துள்ளது. (அ-1)

## 90 நாள்களுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமை மீறல் மனு மீதான பூர்வாங்க விசாரணை நேற்று உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

14.09.2007 அன்று பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட தியாகராஜா மோகனரூபன் கடந்த 11 மாதங்களாகப் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது கைதும், தடுத்துவைப்பும் சட்டவிரோதமானவை என உயர் நீதிமன்றில் மனித உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்ய சட்டத்தரணி மூலம் சத்தியக் கடதாசியில் கையொப்பமிட அனுமதி கோரியபோது அதற்கு புலனாய்வுப் பிரிவின் அத்தியட்சகர் அனுமதி வழங்கினார்.

ஆனால், அதன் பொறுப்பதிகாரி அனுமதி வழங்க மறுத்ததையடுத்து சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவினால் இந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. மனுவில் முதலாம் பிரதிவாதியாக பிரசன்ன டி அல்விஸ் - பயங்கரவாதப் பிரிவுப் பொறுப்பதிகாரி, 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் பிரதிவாதிகளாக அதன் அத்தியட்சகர், பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## அரசமைப்புக் கவுன்ஸில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சமயம் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த அரச சட்டத்தரணி ராஜீவ குணதிலக, இலங்கை அரசமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடரவே முடியாது என்பதைச் சுட்டிக்காட்டினார்.

அதை ஆட்சேபித்து மனுதாரர்கள் தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் வாதிட்டார்.

"2005 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அரசமைப்பின் 17 ஆவது திருத்தப்படி அந்த ஆண்டு மார்ச் மாதத்திலேயே மேற்படி அரசமைப்புக் கவுன்ஸில் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், அது இற்றைவரை நிறைவு செய்யப்படவில்லை.

"அரசமைப்பினால் வலியுறுத்தப்பட்ட ஒரு தேவை நிறைவு செய்யப்படவில்லை, அதை நிறைவுசெய்யவேண்டும் என்ற பிரகடனத்தை வெளியிடுமாறே நாம் நீதிமன்றைக் கோருகின்றோம். அரசமைப்பு ஏற்பாடுகள் வலியுறுத்துகின்றபடி அந்தப் பணியைச் செய்யவேண்டியவர் ஜனாதிபதி. அதனால் அவரை எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிட்டுள்ளோம். எனவே, அத்தகைய பிரகடனத்தை நீதிமன்றம் பரிசீலித்து உத்தரவு விடுக்கலாம்" - என்று சுமந்திரன் வாதிட்டார்.

நாட்டின் பிரஜைகள் எவரும் அரசமைப்புக்கு மேலான அதிகாரம் கொண்டவர்கள் அல்லர் என்று சுட்டிக்காட்டிய பிரதம நீதியரசர், அரசமைப்பின் தேவைப்பாட்டை நிறைவு செய்வது கட்டாயம் என்ற அடிப்படையில் இந்த வழக்கு விசாரணைக்கு ஏற்கப்படுவதாக அறிவித்தார்.

அரசமைப்பு கவுன்ஸில் நிறுவும் நடவடிக்கையில் எதிர்க்கட்சித் தலைவர், பிரதமர் ஆகியோர் சம்பந்தப்பட்டிருப்பதால் அவர்களையும் இந்த மனுக்களில் எதிர்மனுதாரர்களாகச் சேர்க்க அனுமதி கோரி மனுதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு அதற்கு அனுமதியளித்தது.

வழக்கு செப்ரெம்பர் 22ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (சி)

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA.
BIOLGY 2010
2ஆம் தவணை பாடம் அலகு ஆரம்பம்.
தொழிற்படும் தாவரம்
ஆரம்பம்:- 31.07.2008
Thu:- 2.45 - 4.30 P.M
Tue:- 6.30 - 7.30 A.M
சு.பொன்தியாகரன்
CHEMISTRY PAPER CLASS
★ முழு அலகு உள்ளடங்கலான மாதிரி வினாவிடை வகுப்பு
★ அச்சடிக்கப்பட்ட பாடக் குறிப்புகள்
★ அலகு ரீதியான கருத்தரங்குகள்
ஆரம்பம்:- 01.08.2008
Mon:- 4.00 - 6.00 P.M
Fri :- 5.00 - 6.00 P.M
DIAS Bsc(Hons) Spl in che

## நாளை மறுதினம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் அறிவித்திருந்தன.

ஆனால் ஒகஸ்ட முதலாம் திகதி பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்படவில்லை என்று பொது நிர்வாக அமைச்சு இப்போது தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகம் இந்த விடுமுறை குறித்து எதனையும் அறிவிக்கவில்லையென அமைச்சின் மேலதிக செயலாளர் சுஜாதா வீரதுங்க தெரிவித்துள்ளதாக அரச தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

அடுத்த மாதம் முதலாம்திகதி பொது விடுமுறை தினமாக சிலர் பொய்யான பிரசாரங்களை மேற் கொண்டு வருகின்றனர். இந்த பிரசாரங்களைப் புறக்கணிக்குமாறு பொது நிர்வாக அமைச்சு பொதுமக்களைக் கேட்டுகொள் வதாகவும் மேலதிக செயலாளர் மேலும் கூறியதாக அரச தகவல் திணைக்களம் செய்திவெளியிட்டுள்ளது. (அ-1)

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளினதும் தலைவர்கள் மத்தியில் இடம்பெறுகின்ற முதலாவது சந்திப்பு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இரு நாடுகளுக்கிடையிலான சமாதான முயற்சிகள் குறித்தும் இதன்போது ஆராயப்படவுள்ளதாக தகவல்கள்வெளியாகியுள்ளன.

இது இவ்வாறிருக்க, பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் மக்தூம் ஷா மஹ்மூட் குரேவி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள 'சார்க்' அமைச்சர்களின் கவுன்சில் மாநாட்டிற்காக இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். (சி)

## மருத் தேவாலயப் பகுதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் ஆயர் வண. இராயப்பு ஜோஸப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ உயர் அதிகாரிகளுடன் ஆலயப்பகுதியை மன்னார் ஆயர் சுற்றிப்பார்வையிட்டார். தேவாலயம் உடனடியாக தம்மிடம் கையளிக்கப்படவில்லை என்றும் இன்னும் சில தினங்களில் இராணுவத்தினர் முறையாகக் கையளிப்பர் என்றும் எதிர் பார்ப்பதாக மன்னார் ஆயர் மேலும் தெரிவித் திருக்கிறார்.

இதேவேளை, ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள மடுத் தேவாலயத்தி ன் ஆவணிமாதத் திருவிழா இம்முறை நடைபெறுவதற்குரிய சாத்தியம் இல்லை எனத் தெரிவித்துள்ள ஆயர், திருவிழா நடைபெறும்போது அங்கு வருகைதரும் பொதுமக்களின் பாதுகாப்பை இராணுவத்தினரும், விடுதலைப்புலிகளும் உறுதிப்படுத்தவேண்டும் என்றும் மடுத்தேவாலயப்பகுதியை யுத்தமற்ற சூனியப்பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (அ-சி)

## வெள்ளவத்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுவரும் 'சார்க்' மாநாட்டை ஒட்டி கொழும்பு நகர் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் ஒரு அங்கமாகவே இந்தச்சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டது என்று தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட 17 பேரும் வெள்ளவத்தைப் பொலிஸில் தடுத்துவைக்கப்பட்டு, விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். (அ-சி)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனம் (The Israeli Military Industrial Complex) இலங்கைக்கான படைத்துறை ஆயுதங்கள் மற்றும் தொழில் நுட்ப உதவிகளை நிறுத்தியுள்ளது.

அண்மைக்காலமாக இலங்கைக்கு உதவிகளை வழங்கிவரும் நாடுகளில் ஈரான் முதல் இடத்தில்உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் பொருளாதார முதலீடுகள், படைத்துறை உதவிகளை அது மேற்கொண்டு வருகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ ஈரானுடன் கொண்டுள்ள உறவை மறைக்க முடியவில்லை. அது வெளிப்படையான ஒன்று. அரசின் இந்தப் புதிய உறவு இஸ்ரேலுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை அரசிடம் உள்ள இஸ்ரேலின் நவீன ஆயுதங்களின் தொழில்நுட்பத்தை ஈரான் அறிந்து கொள்ளலாம் என்ற அச்சம் இஸ்ரேல் அரசிற்கு ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசுக்கு இஸ்ரேல் நீண்டகாலமாக கனரக ஆயுதங்களை விநியோகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே கொழும்புக்கான ஆயுத விநியோகத்தை இஸ்ரேல் அதிகார பூர்வமாக நிறுத்தியுள்ள போதும் ஏற்கனவே வழங்கிய ஆயுதங்களுக்கான உதிரிப்பாகங்களைத் தொடர்ந்து வழங்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## கொழும்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிராண்ட்பாஸ் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் சுவாமி தேவஸ்தான பிரதம குருவும், ஆதீன கர்த்தாவுமான சிவஸ்ரீ பாலரவிசங்கர சிவாச்சாரியார் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று உயர்நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் நிமால் காமினி அமரதுங்க, பி.ஏ.ரட்ணாயக்கா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு விடுக்கப்பட்டது.

இந்த சங்கமப் பிரதேசம் 2006 நவம்பர் 25 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

தற்போது 'சார்க்' மாநாடு கொழும்பில் நடைபெறுவதை ஒட்டி பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதால் அங்கு மக்கள் செல்ல அனுமதிக்க முடியாது என நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த அரச சட்டத்தரணி ரஜீவ குணதிலக தெரிவித்தார்.

இரு தரப்பு வாதங்களையும் செவிமடுத்த நீதியரசர்கள் அன்றைய தினம் காலை முதல் நண்பகல் வரை அப்பகுதிக்குப் பொறுப்பான பாதுகாப்பு அதிகாரிகளின் ஆலோசனையுடன் அவர்கள் காட்டும் பிரதேசத்தில் சிரார்த்தம் மற்றும் பிதிர்களுக்கான தர்ப்பணத்தை இந்துக்கள் செய்யலாம் எனவும்-

இந்தச் சமயக் கடனை ஆற்றவரும் இந்துக்களை அடையாளம் காட்டி, பாதுகாப்பைப் பேண மனுதாரர்கள் ஒத்துழைக்கவேண்டும் எனவும் உத்தரவிட்டனர். (அ-சி)

## அமைச்சர்கள் தொண்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நுவரெலியாவில் உள்ள இ.தொ.கா. அலுவலகம் தொடர்பான சிக்கலை ஒட்டியே இத்தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

இளைஞர் வலுவூட்டல் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் முத்து சிவலிங்கம், மத்திய மாகாணசபையின் முன்னாள் கல்வி அமைச்சரும் தற்போதைய மாகாணசபை உறுப்பினருமான பி.இராதாகிருஷ்ணன் ஆகியோருக்கு எதிராகவே இத்தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

கட்சிக்குள் ஏற்பட்ட குழப்பங்களை அடுத்து, அப்போது இ.தொ.காவிலிருந்த எம்.சதாசிவத்தின் பொறுப்பில் உள்ள நுவரெலியா அலுவலகத்துக்குள் ஆறுமுகன் தொண்டமான், முத்து சிவலிங்கம், இராதாகிருஷ்ணன் ஆகியோர் உட்பிரவேசிக்கக்கூடாது என 2000ஆம் ஆண்டு ஓகஸ்டில் நுவரெலியா நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

பின்னர் இ.தொ.கா.தாக்கல் செய்த மனு ஒன்றை விசாரணை செய்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியை ஆரம்பித்திருக்கும் எம்.சதாசிவம் அந்தக் கட்சியின் செயற்பாடுகளுக்கு இ.தொ.கா. அலுவலகத்தைப் பயன்படுத்தக் கூடாது என 2003 இல் உத்தரவு பிறப்பித்தது.

இதனையடுத்து ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இ.தொ.காவினர் அந்த அலுவலகத்தைத் தமது கட்டுப்பாட்டில கொண்டு வந்தனர். அங்கு இ.தொ.கா. அலுவலகம் இயங்கி வருகின்றது.

அதை ஆட்சேபித்தும், நீதிமன்றத் தடையை மீறியதன் மூலம் நீதிமன்றை அவமதித்துள்ளனர் என்று குற்றஞ்சாட்டியும் எம்.சதாசிவம் நுவரெலியா நீதிவான் நீதிமன்றில் ஒரு மனுச் செய்தார்.

அந்த வழக்கின் மீதே நேற்று மேற்படி குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராகத் தாம் மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப் போகின்றார்கள் என மேற்படி மூன்று தலைவர்களின் சார்பிலும் நீதிமன்றத்தில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. அதனால் தாங்கள் அபராதத் தொகையைச் செலுத்த மாட்டார்கள் என்றும் அவர்கள் தரப்பில் கூறப்பட்டது.

இதையடுத்து மேன்முறையீட்டுக்குக் கால அவகாசம் வழங்கி அடுத்த மாதம் 26 ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்தார் நுவரெலியா நீதிவான்.(அ-சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org